வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 01 | 11.07.2021 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 220 | பக்கங்கள் : 16







# அரசிலிருந்து வெளியேறுவதில் மைத்திரி அணி இரட்டை நிலை

## அவசரப்படக்கூடாது என்கிறார் சிறிசேன

கொழும்பு, ஜூலை 11

சிறிலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரச கூட்டணியிலிருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வெளியேறவேண்டுமென அந்தக் கட்சியின் மத்திய செயற் குழு உறுப்பினர்கள் சிலரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை கட்சித் தலைவர் மைத்திரிபால சிறிசேன நிராகரித்துள்ளார் என தெரியவருகின்றது.

15



## மேலும் 33 பேர் உயிரிழப்பு!

கொழும்பு, ஜூலை 11

கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 33 பேர் நேற்று முன் தினம் உயிரிழந்துள்ளனர். இது தொடர்பான அறிவித்தலை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் நேற்று மாலை வெளியிட்டார். 19 ஆண்களும், 14 பெண்களுமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இதன்படி வைரஸ் தொற்றால் பலியானவர்களின் எண்ணிக்கை 3 ஆயிரத்து 467 ஆக அதிகரித்துள்ளது.

## மாகாணத்தடை தொடர்ந்தும் நீடிப்பு!

கொழும்பு, ஜூலை 11

மாகாணங்களுக்கிடையிலான பயணக்கட்டுப்பாடு மேலும் 14 நாட்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

அத்துடன் வழிபாட்டுத்தலங்களை திறப்

15



## அரசுக்கு எதிராக நேற்று யாழ்.நகரில் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 11

யாழ்ப்பாணத்தில் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நேற்று சனிக்கிழமை கவனவீர்ப்பு போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

புதிய ஜனநாயக

15

## பருத்தித்துறையில் 23 பேர் உட்பட வடக்கில் 34 பேருக்கு கொரோனா!

யாழ்ப்பாணம், ஜூலை 11

பருத்தித்துறையில் 23 பேர், வவுனியாவில் 08 பேர் உட்பட வடக்கில் 34 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

பருத்தித்துறையில் 60 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில் 23

15

## நேற்று 1,548 தொற்றாளர்கள்!

கொழும்பு, ஜூலை 11

இலங்கையில் நேற்று 1,548 கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் கண்டறியப்பட்டனர். நாட்டில் இதுவரை கண்டறியப்பட்ட தொற்றாளர்களின் எண்ணிக்கை 273,031

15

## சு.கவுடன் ஜனாதிபதி 21ஆம் திகதி சந்திப்பு

கொழும்பு, ஜூலை 11

சுதந்திரக் கட்சிக்கும், ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவுக்குமிடையில் சந்திப்பு இடம்பெறவுள்ளது. எதிர்வரும் 21ஆம் திகதி இந்த சந்திப்பு நடைபெறவுள்ளது.

பொதுஜன பெரமுனவுக்குள் மோதல்கள் உச்சமடைந்துள்ளன. அரசாங்கம் தம்மை கணக்கிலெடுப்பதில்லையென சு.க. கடும் அதிருப்தியில் உள்ளது.

தமது உள்ளூராட்சிப் பிரதிநிதிகளை அரசாங்கம் புறக்கணிப்பதாகவும், அரசாங்க விவகாரங்களில் தொகுதி

15

## ஆசிய அபிவிருத்தி வங்கியால் 150 மில்லியன் டொலர் கடனுதவி

கொழும்பு, ஜூலை 11

கொரோனா தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ளும் வகையில் இலங்கைக்கு 150 மில்லியன் டொலர் கடனுதவியை வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி அங்கீகாரம் வழங்கியுள்ளது.

வளரும் உறுப்பு நாடுகளுக்கு தடுப்பூசி தொடர்பான ஆதரவை வழங்க டிசெம்பர் 2020 இல் தொடங்கப்பட்ட ஆசிய பசிபிக் தடுப்பூசி அணுகல் வசதியின் ஒரு பகுதியாக இந்த நிதி வழங்கப்படவுள்ளது.

கொரோனாவில் இருந்து மக்களை பாதுகாக்கவும், பாதித்துள்ள பொருளாதாரத்தை மீட்டெடுக்

15

## தாதியர்கள், பல் மருத்துவர்கள் ஓய்வுபெறும் வயதெல்லை 63!

கொழும்பு, ஜூலை 11

தாதிய உத்தியோகத்தர்கள் மற்றும் பல் மருத்துவர்களுக்கான ஓய்வூதிய வயது 63ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பொது சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிமன்ற அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் வெளியிட்டுள்ள அதிசிறப்பு வர்த்தமானியை வெளியிட்டுள்ளார்.

இது ஜூன் 14ஆம்

15

## நாடு திறந்த பின் நாடகம் நடத்துங்கள் அதுவரை பொறுமையாக இருங்கள்



### அமைச்சர் நாமல் ராஜபக்ஷ கோரிக்கை

கொழும்பு, ஜூலை 11

“நாடு திறந்த பிறகு எந்த நாடகத்தையும் நடத்துங்கள், அது வரை பொறுமையாக இருங்கள்” என்று விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ கேட்டுள்ளார்.

கோவிட்-19 தொற்றுநோயிலிருந்து மக்களைப் பாதுகாக்க நாடு முறையாகத் திறக்கப்படும் நேரத்தில், கொரோனா தொற்றின் நான்காவது அலை உருவாகு வதைத் தடுக்கு

15

## காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளையை தேடியலைந்த தந்தை ஒருவர் மரணம்

கிளிநொச்சி, ஜூலை 11

காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனை 26 ஆண்டுகளாக தேடி அலைந்த தந்தை ஒருவர் நேற்று முன் தினம் உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி பரந்தன் 11ஆம் ஒழுங்கையைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான சின்னத்தம்பி இராசரத்தினம் என்பவரே சுகவீனம் காரணமாக உயி

15

## இப்படியும் நடக்கிறது...!

அது ஒரு வகுப்பறை. தமிழ்ப் பாட ஆசிரியர் மாணவர்களிடம் கேட்டார்,

“நான் கோடீஸ்வரனானால்” என்ற தலைப்பில் மாணவர்கள் ஒவ்வொருவரையும் கட்டுரை எழுதித்தரச் சொன்னார்.

மாணவர்கள் எல்லோரும் ஆர்வத்துடன் கட்டுரை எழுதத் தொடங்கினர்.

கோடீஸ்வரனானால் எப்படியெல்லாம் வாழவேண்டும் என்று நினைப்பது கஷ்டமான காரியமா என்ன?

வகுப்பறையில் இருந்த எல்லா மாணவர்களும் எழுதிக்கொண்டிருந்தனர். அவர்கள் முகத்தில் மகிழ்ச்சியின் ரேகைகள். கோடீஸ்வரர்களாகிவிட்ட மகிழ்ச்சியால் வந்ததாக இருக்கவேண்டும்.

ஒரே ஒரு மாணவன் மட்டும் எதுவும் எழுதாமல் இருந்துகொண்டிருப்பதைப் பார்த்த ஆசிரியருக்கு கோபம் வந்திருக்கவேண்டும்.

ஒன்றும் எழுதாமல் சும்மா இருந்த அந்த மாணவனைப் பார்த்து, நீ ஏன் எதுவும் எழுதவில்லை, என்று அதட்டும் பாணியில் கேட்டார் ஆசிரியர்.

அதற்கு அந்த மாணவன், சிரித்துக்கொண்டே பதில் சொன்னான்,

“நான் கோடீஸ்வரனானால் எதுவும் செய்ய மாட்டேன் சேர்” என்று.

அரசாங்கத்தின் ஜனநாயக விரோத நடவடிக்கைகளை கண்டித்து சுதந்திர சதுக்கத்தில் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றிருந்தது.

ஐக்கிய மக்கள் சக்தி நடத்திய இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் நமது விக்னேஸ்வரனும் கலந்துகொண்டிருந்தார்.

நீண்ட காலத்திற்கு பின்னர் விக்னேஸ்வரன் ஒரு பொது நிகழ்ச்சியில் கலந்துகொண்டிருந்தமையைக் காணமுடிந்தது.

கூட்டமைப்பிற்கு மாற்றாக அரசியல் செய்யப் புறப்பட்ட விக்னேஸ்வரன் இப்போது தனி ஆளாக நின்று போராடிக்கொண்டிருக்கிறார்.

போராடிக்கொண்டிருக்கிறார் என்பது, பாராளுமன்றத்தின் படிகளில் ஏறி இறங்குவதற்கே போராட வேண்டியிருக்கின்றது என்று அவர் அண்மையில் தனக்கு வேண்டியவர்களிடம் கூறியிருக்கிறார். அவரின் உடல்நிலையைத்தான் அவர் அப்படி சொன்னாரெனத் தெரிகின்றது.

இந்நிலையில், எதிர்க்கட்சியினர் நடத்திய அந்தப் போராட்டத்தில் கலந்துகொண்ட பின்னர் விக்கி ஐயா தெரிவித்த விளக்கம் கவனத்தில் கொள்ளவேண்டியது.

அவர் சொன்னவற்றிலிருந்து சில வரிகளை கீழே தருகின்றோம்.

“ஜனநாயக ரீதியில் தேர்தல் ஒன்று நடைபெறும்போது வேட்பாளர்களுக்கும் வாக்காளர்களுக்கும் இடையில் எழுத்தில் அடங்காத உடன்பாடு ஒன்று எட்டப்படுகின்றது. நாம் உங்களுக்கு வாக்களித்து நீங்கள் வென்றால் எமது பிரச்னைகளைப் பேசவேண்டும். அவற்றுக்கு தீர்வுகாண வேண்டும். அதிகாரம் கிடைத்த பின்னர் எம்மை விரட்டக்கூடாது என வாக்காளர் வேட்பாளர்களுடன் உடன்பாடு செய்கின்றனர்.

வேட்பாளர்களும் இந்த எழுத்தில் அடங்காத உடன்பாட்டை ஏற்றுக்கொண்டு, நாம் வென்றால் உங்கள் பிரச்னைகளைத் தீர்ப்போம், சுயநலம் கருதிச் செயல்படமாட்டோம். உங்களுடன் ஒன்றாக நிற்போம் என்று கூறுகின்றனர். இதுதான் ஜனநாயகத்தின் தாற்பரியம்”

இதுதான் விக்கி ஐயா சொன்ன வார்த்தைகள். அரசாங்கம் தமக்கு வாக்களித்த மக்களுக்கு அவர்களின் தேவைகளை நிறைவேற்றவேண்டும் என்பதற்காக அவர் வழங்கிய ஆலோசனை அது.

உண்மைதான், எங்கள் எம்.பி.க்கள் ஒவ்வொருவருக்கும் வாக்காளர்களுடன், அதுதான் நமது மக்களுடன் எழுதப்படாத உடன்பாடு ஒன்று உண்டு.

மக்கள் பிரச்னைகளை அவர்கள் பாராளுமன்றத்தில் பேசவேண்டும் என்பது மாத்திரமல்ல, அவர்கள் பிரச்னைகளை தீர்த்துவைக்கவும் வேண்டும் என்பதுதான் அந்த உடன்படிக்கை என்று அவரே சொல்லிவிட்டார்.

மக்கள் பல்வேறு பிரச்னைகளுடன் இருக்கின்றனர் என்பது அவர் அறியாததல்ல. ஆயிரக்கணக்கான நாட்களாக மக்கள், காணாமல் ஆக்கப்பட்ட தம்மவர்களைத் தேடிப் போராடிக்கொண்டிருக்கிறார்கள்.

தொல்லியல் ஆய்வு என்ற பெயரில் பல விடயங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. இவற்றுக்குத் தீர்வு காண்பார் என்றும்தான் மக்கள் அவருக்கு வாக்களித்திருக்கிறார்கள்.

கோடீஸ்வரன் ஆகிவிட்டால் நான் ஒன்றும் செய்யப்போவதில்லை என்றுவிட்டு கட்டுரை எழுதாமல் இருந்த மாணவனிடம் கோடீஸ்வரராக என்ன செய்யவேண்டும் என்று கட்டுரை எழுதச்சொல்லியிருந்தால் எழுதித்தானே ஆகவேண்டும்.

**- ஊர்க்குருவி**

# பருத்தித்துறையில் 23 பேருக்கு கொரோனா!

யாழ்ப்பாணம், ஜூலை 11

பருத்தித்துறை பிரதேசத்தில் 60 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜென் பரிசோதனையில் 23 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்



தப்பட்ட நிலையில் அந்த மக்கள் வசிக்கும் கிராமம் தனிமைப்படுத்தல் நடவடிக்கைக்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறையின் ஜே/401 கிராம அலுவலர் பிரிவில் நேற்று 60 பேருக்கு அன்டிஜென் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவர்களில் 23 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட் டுள்ளது.

இந்நிலையில் குறித்த கிராம அலுவலர் பிரிவை தனிமைப்படுத்துமாறு சுகாதாரத் தரப்பினர் மாவட்ட செயலருக்கு பரிந்துரைத்துள்ளனர்.

குறித்த கிராம அலுவலர் பிரிவில் 53 குடும்பங்கள் வசிப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

(அ-03)

## முல்லைத்தீவில் தனிமைப்படுத்தப்பட்ட ஆசிரியர் சங்கத்தினருக்கு மாற்றுடை

முல்லைத்தீவு, ஜூலை 11

கொழும்பில் கைது செய்யப்பட்டு முல்லைத்தீவு விமானப்படை முகாமில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள இலங்கை ஆசிரியர் சங்கத் தலைவர் உட்பட்டவர்களுக்கு யாழ். மாநகர முதல்வர் வி.மணி வண்ணன், வலி.கிழக்கு பிரதேச சபை தவிசாளர் நிரோஷ் உட்பட்டவர்களால் மாற்று உடைகள் கையளிக்கப்பட்டுள்ளன.

கொழும்பில் சுகாதார நடைமுறைகளை மீறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டில் முல்லைத்தீவுக்கு அழைத்து வரப்பட்டு இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் ஜோசப் ஸ்டாலின் உட்பட்ட 31 பேர் தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர்.

மறுநாள் அவர்கள் தொடர்பிலான ஒளிப்படங்கள் வெளியாகியிருந்த நிலையில் அவர்களுக்கு மாற்றுடைகள் கூட வழங்கப்படாத நிலையில் பராமரிப்புக்காக அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த போர்வைகளை அவர்கள் மாற்றுடைகளாக அணிந்திருந்தமை அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது.

இந்நிலையில் மூத்த சட்டத்தரணி யோதிலிங்கம் மற்றும் யாழ். மாநகரசபை முதல்வர் வி.மணிவண்ணன், வலி.கிழக்கு பிரதேச சபை தவிசாளர் உட்பட்டவர்கள் நேற்று வட்டுவாகல் பகுதிக்குச் சென்று அவர்களுக்குத் தேவையான மாற்றுடைகளைக் கையளித்தனர்.

## மண்சரிவில் சிக்கி குடும்பஸ்தர் உயிரிழப்பு!

கம்பளை, ஜூலை 11

கம்பளை, தொலஸ்பாகை வின்ட போரஸ்ட் பகுதியில் நேற்று அதிகாலை வீடொன்றின் மீது மண்மேடு சரிந்து விழுந்ததில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நான்கு பிள்ளைகளின் தந்தையான 75 வயதுடைய நபரே இவ்வாறு பலியாகியுள்ளார்.

கம்பளைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு முதல் அடை மழை பெய்துவருகின்றது. இந்நிலையிலேயே நேற்று அதிகாலை குறித்த வீட்டின்மீது மண்மேடு சரிந்து விழுந்துள்ளது.

இதனால் வீட்டுக்குப் பெரும் தேசம் ஏற்பட்டுள்ளது. பிரதேச வாசிகள், பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் இணைந்து மண்ணுக்குள் புதையுண்டவரை மீட்டனர். எனினும், அவர் உயிரிழந்து விட்டார். (இ)

### கல்வி tv CHANNEL-1

**11.07.2021 ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English வினாத்தாள் |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு வணிகப்பிரிவு |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் வினாத்தாள் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 04.30 | தரம்-10 | English |

### கல்வி tv CHANNEL - 2

**11.07.2021 ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | English |
| 09.00 | தரம்-02 | அழகியல் |
| 09.45 | தரம்-03 | English |
| 10.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 01.15 | தரம்-05 | English |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | அழகியல் |
| 06.00 | தரம்-03 | English |
| 06.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-05 | English |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | English |
| 12.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | தரம்-05 | English |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
11.07.2021 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், ஆனி 27

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
**தொலைபேசி : 021 730 1370**

# யார் காரணம்?

பஸில் ராஜபக்ஷ நிதி அமைச்சராக பதவி ஏற்றமையை தொடர்ந்து, பலவாறான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. பஸில் ராஜபக்ஷவின் ஆட்டம் ஆரம்பமாகிவிட்டது என, அவரின் ஆதரவாளர்கள் கொண்டாடி வருகின்றனர். எவர் வந்தாலும் நாட்டை மீட்டெடுக்க முடியாது. ஏனெனில், அந்தளவிற்கு நாட்டின் பொருளாதாரம் அதல பாதாளத்திலிருக்கின்றது என, எதிர்த் தரப்புக்கள் கூறிவருகின்றன.

இவ்வாறான விமர்சனங்களுக்கு மத்தியில் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினரும், 43 படையணியின் தலைவருமான சம்பிக்க ரவணக்க, நாட்டின் இன்றைய மோசமான நிலைக்கு ராஜபக்ஷ குடும்பமே காரணமென்று குறிப்பிட்டிருக்கின்றார். நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி 16 வருடங்களுக்கு முன்னர், மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில்தான் ஏற்பட்டது எனவும் சம்பிக்க தெரிவித்திருக்கின்றார். இவ்வாறு கூறும் சம்பிக்க ரணவக்கவும், ஆரம்பத்தில் மஹிந்த ராஜபக்ஷவுடன் நெருக்கமாக இருந்த ஒருவர்தான். அதேபோன்று நாடு சீனாவின் பிடிக்குள் சென்றுவிட்டது, இதற்கான முழுப் பொறுப்பும் ராஜபக்ஷவையே சாரும், என்று கூறிவரும் மங்கள சமரவீரவும் ஆரம்பத்தில் மஹிந்த ராஜபக்ஷவின் நெருங்கிய நண்பர்தான்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான இறுதி யுத்தத்தின்போது, மஹிந்தவின் ஆட்சியில் சம்பிக்க, பிரதான பங்கு வகித்திருந்தார். அதன் பின்னரும் மஹிந்த கூட்டின் உற்ற நண்பனாகவே இருந்தார். ஆனால், தென்னிலங்கையின் அரசியல் அதிகார மையம் முற்றிலும் ராஜபக்ஷக்களின் வசமாகியபோதுதான் முரண்பாடுகள் தோன்றின. சம்பிக்க வெளியேறினார். மங்களவின் நிலைமையும் இதுதான். குடும்ப உறுப்பினர்கள் அரியாசனத்தை ஒட்டுமொத்தமாக அலங்கரிக்க ஆரம்பித்த போதுதான், ஆரம்பத்தில் அரசாங்கத்திற்கு முண்டுகொடுத்தவர்கள் அனைவரும் தங்களின் தவறுகளை உணரத் தொடங்கினர்.

இந்த நாட்டின் பொருளாதார சரிவானது, உண்மையில் 16 வருடங்களுக்கு முன்னர் ஏற்படவில்லை. இதனை இன்னும் பல வருடங்கள் முன்நோக்கி பார்க்க வேண்டும். தமிழர்களின் மிதவாத அரசியல், ஆயுதப் போராட்டத்தை நோக்கி நகர்ந்தபோதே, இந்த நாட்டின் பொருளாதாரம் சரிவடையத் தொடங்கிவிட்டது. தமிழ் மிதவாத தலைவர்களுடன் பேசி இனப்பிரச்னைக்கு ஒரு நியாயமான தீர்வை காண்பதில் கொழும்பின் அதிகார மையம் நாட்டம் கொண்டிருக்கவில்லை. மாறாக, தமிழர்களை அடக்கி ஒடுக்குவதிலேயே தனது முழுக் கவனத்தையும் செலுத்தியது. அன்றைய காலத்தில் மேற்கொள்ளப்பட்ட பண்டா - செல்வா மற்றும் டட்லி - செல்வா ஒப்பந்தம் இதற்கு சிறந்த உதாரணங்களாகும். அந்த ஒப்பந்தங்கள் நிறைவேற்றப்பட்டிருந்தால் இலங்கையின் வரலாறு வேறு விதமாக சென்றிருக்கும்.

இறுதியில் தமிழர்களின் அரசியல் போராட்டம் ஓர் உள்நாட்டு யுத்தமாக மாறியது. சுமார் முப்பது வருடங்கள் உள்நாட்டு யுத்தத்திற்குள் சிக்கியிருந்த நாட்டின் பொருளாதாரம் தொடர்பில்தான், சிங்கள ஆளும் வர்க்கம் இப்போது விவாதித்துக் கொண்டிருக்கின்றது. யுத்தத்தில் விடுதலைப் புலிகளை அழிப்பதற்கு எந்த பிசாசுடனும் கூட்டுச் சேர்வதற்கு மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் தயாராக இருந்தது. இந்த இடைவெளியையே சீனாவும் பயன்படுத்திக்கொண்டது. உண்மையில் தமிழர்களை ஒடுக்கும் முயற்சியில்தான் சீனாவும் உள்நுழைந்தது. இன்று எல்லாம் கையை மீறிப் போன பின்னர்தான், சிங்கள ஆளும் வர்க்கம் இதற்கான காரணங்களை தேட முற்படுகின்றது.

இந்த நெருக்கடியான நிலையில்கூட, தமிழ் மக்களின் நியாயமான பிரச்னைகளை தீர்ப்பது தொடர்பில் எவரும் சிந்திக்க தயாராக இல்லை. தமிழர்களையும் நாட்டின் சம பங்காளிகளாக உள்வாங்கிக் கொள்வது தொடர்பில் சிந்திக்க தயாராக இல்லை.

# மாற்றமடையும் உலக ஒழுங்கில் மாற்றமடையும் வல்லரசுகளின் ஆக்கிரமிப்பு எல்லைகள்

- சிவா செல்லையா -



உலக வல்லரசுகள் தமது நலனுக்காக நவீன காலனித்துவக் கொள்கைகளை கடைப்பிடிக்கின்றன. இவை நேரடி இராணுவ ஆக்கிரமிப்பாகவோ, இராணுவ ஒத்துழைப்பு முயற்சிகளாகவோ, பொருளாதார முதலீடுகளாகவோ, பொருளாதார ஒத்துழைப்புகளாகவோ அமைகின்றன.

இத்தகைய ஆக்கிரமிப்பு வல்லரசுகளில் ஐக்கிய அமெரிக்கா, ரஷ்யா என்பன 20ம் நூற்றாண்டின் இறுதி பாதிக் காலத்தில் போட்டி போட்டன. தற்போது அவ்விடத்தினை சீனா நிரப்பி உலகில் முதன்மை வல்லரசாக வர முயற்சிக்கின்றது. இதனை அண்மைய சீனா கம்யூனிஸ்ட் கட்சியின் 100 வருட கொண் டாட்டத்தின் போது சீனா ஜனாதிபதி தெளி வாகக் கூறியுள்ளார்.

தற்போதைய பூகோளப் பெருந்தொற்றுப் பேரிடல் நிலையில் உலகில் அமெரிக்க சார்பு முதலீட்டுப் பெறுமானம் குறைந்து சீனா சார்பு முதலீட்டுப் பெறுமானம் அதிகரித்துள்ளது. இனி எதிர்வரும் காலங்களில் மேற்குலகின் செல்வாக்கு வீழ்ச்சிய டைந்து கிழக்குலகில் சிங்கப்பூர், டோக்கியோ, சியோல் போன்ற நகரங்கள் எழுச்சி பெறலாம்.

**தற்போதைய பூகோளப் பெருந்தொற்றுப் பேரிடல் நிலையில் உலகில் அமெரிக்க சார்பு முதலீட்டுப் பெறுமானம் குறைந்து சீனா சார்பு முதலீட்டுப் பெறுமானம் அதிகரித்துள்ளது. எதிர்வரும் காலங்களில் மேற்குலகின் செல்வாக்கு வீழ்ச்சியடைந்து கிழக்குலகில் சிங்கப்பூர், டோக்கியோ, சியோல் போன்ற நகரங்கள் எழுச்சி பெறலாம்.**

சீனா சார்பு அரசினை எதிர்த்தே தமிழர்கள் தமது இருப்பினைக் காப்பாற்ற வேண்டிய சூழல் ஏற்பட்டு உள்ளது. இது மிகவும் பலவீனமான சூழல். சீனாவின் செல்வாக்கு மத்திய கிழக்கில் எவ்வாறு விஸ்தரிக்கின்றதோ அதன் தாக்கத்தினை பொறுத்தே ஈழத தமிழரின் அரசியல் பயணம் எதிர்காலத்தில் அமையும். இதற்காக ரஷ்யாவும் ஐக்கிய அமெரிக்காவும் ஆப்கானிஸ்தானில் கடந்த காலத்தில் பெற்ற விளைவுகளை நாம் விரிவாக ஆராய வேண்டும்.

ஐக்கிய அமெரிக்காவின் இராணுவச் செலவீனங்கள் மத்திய கிழக்கில் மட்டுப் படுத்தப்படவேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. இதனால் தனது ஆக்கிரமிப்பில் ஆப்கானிஸ்தானில் இருந்து தனது படைகளை வாபஸ் பெறும் சூழல் உள்ளது. பெரஸ்ரிரொய்க்காவின் போது ரஷ்யா ஆப்கானிஸ்தானில் இருந்து விலகியபோது அங்கு ஐக்கிய அமெரிக்கா கால் பதித்தது.

தற்போதைய சூழலில் இவ்வாறே ஐக்கிய அமெரிக்கா ஆப்கானிஸ்தானை விட்டு விலகும் சுழலில் சீனா இங்கு பொருளாதார முதலீடுகள் மூலம் கால் பதிக்க உள்ளது. இது மத்திய கிழக்கு நாடுகளில் சீனாவின் பலம் அதிகரிக்க ஏதுவாக அமையும். இஸ்லாமியத் தீவிரவாதம் ஆரம்பத்தில் ரஷ்யாவிற்கு எதிராகவும் பின்னர் ஐக்கிய அமெரிக்கா உட்பட மேற்குலகிற்கு எதிராகவும் எவ்வாறு உருவாகியதோ அவ்வாறே புதிய உலக ஒழுங்கில் இஸ்லாமியத் தீவிரவாதம் சீனாவிற்கு எதிராக உருவாகும்.

மத்திய சிழக்கில் தொடர்ந்து இரத்தக் களரி ஏற்படாது இருப்பதற்கு சிறந்த விழிப்பினை மனிதநேயச் செயற்பாட்டார்கள் ஏற்படுத்த வேண்டும். எந்த சுதேச மக்களும் தமது வளங்கள் சுரண்டப் படும்போது அதனை எதிர்ப்பது வழமை. ஆனால் அதனை உலக வல்லரசுகள் தமது நலன் களுக்காக ஆட்சி மாற்றங் களையும் யுத்தங்களையும் உருவாக்குகின்றன. தற்போதைய மாற்றமடையும் புதிய ஒழுங்கில் ஆப்கானிஸ்தான் மட்டுமல்ல இலங்கையும் ஓர் முக்கிய கேந்திர மாற்றநிலையமாக உள்ளது.

உலகில் சீனாவின் முதலீட்டுக்கு இணையாக ஏனைய வல்லரசுகளால் முதலிட முடியாது. இந்நிலையில் இலங்கையில் பிராந்திய ரீதியான வல்லரசு ஆதிக்கங்கள் நிகழலாம். இலங்கையின் வடக்கு கிழக்கு மலையகப் பகுதிகள் இந்திய அரசின் செல்வாக்கின் ஊடுருவி ஐக்கிய அமெரிக்காவின் கட்டுப் பாட்டிற்கு உட்படலாம். அதாவது இலங்கையின் திருகோணமலையில் ஐக்கிய அமெரிக்கா இந்தியாவுடன் இணைந்து ஓர் கடற்படைத் தளத்தை உருவாக்கலாம்.

ஏனெனில் ஆப்கானிஸ்தானில் சீனா காலூன்றும்போது சீனாவை கண்காணிக்க இந்திய அரசுக்கும் ஐக்கிய அமெரிக்காவிற்கும் ஓர் சிறந்த புள்ளியாக திருகோணமலை அமையும். மத்திய கிழக்கில் சீனாவைக் கட்டுப்படுத்த இலங்கையை சிறந்த புள்ளியாக இஸ்ரேல் கருதுகின்றது. இதனால் புலம்பெயர் தமிழர்களை வடக்கு கிழக்கு அரசியலில் நேரடியாக ஈடுபடுத்தும் நிலை வரும். உலக வல்லரசுகளின் ஆதிக்க ஒழுங்கில் அகப்பட்டு அழியும் இனங்களில் ஒன்றாக இஸ்லாமியர்களும் தமிழர்களும் அமைவது துர்லபமே ஆகும்.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஈழநாடு



ஜூலை - 11 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம் - ஆனி 27
நல்ல நேரம் : 7.30 - 9.00
ராகு காலம் : 4.30 - 6.00
திதி : துவிதியை




**மேடம்**
செலவுகளைக் குறைப்பீர்கள். பிரச்னை தீரும். உறவினரிடையே இருந்த பகை மறையும். சிலருக்குத் திருமணம் கைகூடும். பாராட்டு பெறுவீர்கள்.

**இடபம்**
உங்களை பற்றிய வதந்தி நீங்கும். வேலை கிடைக்கும்.பிள்ளைகளால் செலவு கூடும். உதவிகள் தாமதமாகும்.தாழ்வு மனப்பான்மை தலை தூக்க விடாமல் இருங்கள்.

**மிதுனம்**
பேச்சு சாதுர்யத்தால் வெற்றி காண்பீர்கள். உங்கள் மீதுள்ள தவறான அபிப்ராயம் மறையும்.உங்கள் செயல்பாட்டை மற்றவர் பாராட்டுவர்.

**கடகம்**
வயதானவர்கள் உடல்நலனில் கவனம் செலுத்துங்கள். குடும்பத்தினரிடையே பிரச்னை நீங்கி நெருக்கம் அதிகரிக்கும். கடன் பிரச்னை தீர்வதற்கான அறிகுறி தென்படும்.

**சிம்மம்**
புதிய முயற்சியில் தாமதம் ஏற்படும். சேமிக்க இயலும். வேலை பளு குறைந்து பொழுது போக்கில் ஈடுபடுவீர்கள். காத்திருந்த வாய்ப்பு கிடைக்கும். வருமானம் சுமாராக இருக்கும்.

**கன்னி**
பொறுப்புடன் செயல்பட்டு நற்பெயர் காண்பீர்கள். அவசர முடிவு எடுக்காதிருப்பது நல்லது. சேமிக்கலாம். கலை ஈடுபாடு கூடும். தைரியத்தை கைவிட வேண்டாம்.

**துலாம்**
பெரியோர் உதவி கிடைக்கும். புது விஷயம் கற்பீர்கள். எதிர்பார்த்த நற்செய்தி வந்து சேரும். வருமானம் உயரும். தந்தையால் பாராட்டு உண்டு. உடல்நிலை சீராகும்.

**விருட்சிகம்**
உறவினர், நண்பர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள். சகோதரர் குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடைபெறும். முயற்சியில் தடை ஏற்பட்டாலும் அது தற்காலிகமானதே.

**தனுசு**
உடல்நலக்குறைவு வந்து நீங்கும். கவனமாக இருக்கவும். அரசின் மூலம் எதிர்பார்த்த நன்மை கிடைக்கும். வீட்டிலோ வெளியிலோ யாரையும் பகைக்க வேண்டாம்.

**மகரம்**
புதிய முயற்சிக்குப் பலரிடமிருந்தும் பாராட்டு கிடைக்கும். உங்களுக்கு கீழ் பணிபுரிபவர்களால் நன்மை சேரும். சாதகமான சூழல் உண்டாகும். தேவையற்ற பயம் வரும்.

**கும்பம்**
அதிகாரிகள், உங்கள் அருமையைப் புரிந்து கொள்வர். பல நாள் விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். இளைஞர்கள் பயணங்களால் புத்துணர்வு பெறுவர்.

**மீனம்**
வருத்தங்களை எதிர்கொண்டு அதிலிருந்து மீள்வீர்கள். எந்த விஷயத்தில் ஈடுபட்டாலும் விடாமுயற்சி தேவை. போட்டிகளில் வெற்றி பெறுவீர்கள். கவலை நீங்கும்.

# பத்திரிகை ஜாம்பவான் எஸ்.டி.எஸ்

**சிவா இராஜஜோதி**

**எஸ்.டி.எஸ் என்ற மூன்றெழுத்தில் மறைந்திருப்பவர்தான், எம்மை விட்டு மறைந்துபோன பத்திரிகை உலகின் ஜம்பவான் அமரர் எஸ்.டி. சிவநாயகம். 02.07.2021 ஆண்டு, இவரது பிறந்த தின நூற்றாண்டாகும். சென்ற வாரம் நினைவுகூறப்பட்டது.**



1921 ஆம் ஆண்டு திருகோணமலையில் பிறந்து வளர்ந்து, கல்வியைத் தொடர்ந்து, கூட்டுறவு திணைக்களகத்தில் பொறுப்புள்ள அதிகாரியாக, தொழில் துறையில் காலடியெடுத்து வைத்தார். பள்ளிப்பருவத்தில் கையெழுத்துப் பத்திரிகையில் அதிக ஈடுபாடு. அதனால் அந்தத் துறையில் முன்னேறவேண்டும் என்ற குறிக்கோள். அத்தோடு புகைப்படத்துறையிலும் மிகுந்த ஆர்வம்.

சென்னை சென்று புகைப்படத் துறையில் தேர்ச்சி பெற்றார். அந்த காலகட்டத்தில் ஈ.வே.ரா பெரியாரின் திராவிட கொள்கையில் தன்னை இணைத்துக் கொண்டு, கடவுள் எதிர்ப்பு போராட்டங்களில் கலந்து கொண்டு, அவரது "விடுதலை" என்ற பத்திரிகையில் கடமை புரிந்தார். அந்த காலகட்டத்தில் பத்திரிகை மேதை "கல்கி" கிருஷ்ணமூர்த்தி அவர்களுடன் தொடர்கொண்டு, தனது எழுத்துத்துறையை வளர்த்துக்கொண்டார். எஸ்.டி.எஸ். என்ற மூன்றெழுத்தின் குருநாதர் அந்த மூன்றெழுத்து கல்கி தான்.

1946ஆம் ஆண்டு "ஐக்கிய தீபம்" என்ற பத்திரிகையை முதல் முதலில் ஆரம்பித்தார். 1947 ஆண்டளவில், மட்டக்களப்பில் சித்ரா ஸ்டுடியோவை நிறுவி, உதயன் என்ற பத்திரிகையையும் நடாத்தி வந்தார். பத்திரிகைத் துறை ஆர்வம் காரணமாக, இலங்கைத் தேசியப் பத்திரிகையான "தினகரன்" பத்திரிகையில் காலடியெடுத்துவைத்தார். அந்த காலகட்டத்தில், இவரது எழுத்துக்கள், கருத்துக்கள், தினகரன் பத்திரிகை மூலம் பேசப்பட்டது. அவரது எழுத்துத்தின் திறமையையும், எழுதும் ஆர்வத்தையும் அறிந்து, தமிழரசு கட்சியின் தந்தை எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்கள் தனது கட்சியில் இணைத்துக்கொண்டு, "சுதந்திரன்" என்ற கட்சிப் பத்திரிகைக்கு ஆசிரியராக்கினார். அந்தப்பத்திரிகையில் இவர் எழுதிய ஆணித்தரமான அரசியல் கட்டுரைகளுக்காகவும், குயுத்தியார் என்ற புனைப் பெயரில் வாசகர்களின் வினாக்களுக்கு வியக்க வைக்கும் விதமாக விடையளித்த விவேகத்துக்காகவும் சுதந்திரன் வார இதழ் விற்பனையில் சாதனை படைத்தது.

மற்றோரு தேசியப் பத்திரிகையான "வீரகேசரிப்" பத்திரிகைக்குள் உள்வாங்கப்பட்டார். ஆரம்ப காலம் தொட்டு, இந்திய வம்சாவளியினரால் கையோங்கியிருந்த ஆசிரியர் பீடத்தை, இலங்கைத் தமிழனாக பொறுப்பேற்றார். அந்தப் பத்திரிகையின் எழுத்து நடையையும், தோற்றத்தையும், ஆசிரியத் தலையங்கத்தையும் தனது பாணியில் மாற்றியமைத்தார். பல இலக்கிய எழுத்தாளர்களையும், படைப்பாளிகளையும், கவிஞர்களையும், பத்தி எழுத்தாளர்களையும் சிறுகதை நாவல் எழுத்துத்துறையில் விற்பன்னர்களையும் அறிமுகப்படுத்தியவர் தான் ஜாம்பவான் எஸ்.டி. சிவநாயகம்.

1966 இல் வீரகேசரியிலிருந்து விலகி, அவர் உருவாக்கிய பத்திரிகைகள் தான் "தினபதி "சிந்தாமணி" என்ற பத்திரிகைகள். எம்.டி.குணசேனா என்ற பெரும்பான்மையினத்தவரின் பத்திரிகை ஸ்தாபனத்தில், அங்கு வெளிவந்த அனைத்துப் பத்திரிகையை விட, விற்பனையில் இவரது படைப்புக்கள் உயர்ந்திருந்தது. அவரும் ஒரு தமிழனாக, அந்த ஸ்தாபனத்தில் நிர்வாகப் பணிப்பாளராக பதவியுயர்த்தப்பட்டார். இவரது 'சிந்தாமணி" பத்திரிகை, இவரது பலசுவாரஷ்யமான தொடர் கட்டுரைகள் மூலமாக, இலங்கை பத்திரிகை வரலாற்றில், வாசகர்களின் நன்மதிப்பைப் பெற்று, விற்பனையிலும் சாதனை படைத்தது.

இவர் பத்திரிகைத்துறையில், விஷேட குணம் படைத்தவர். சுய விளம்பரம் விரும்பாதவர். விழாக்களுக்குச் செல்வதை தவிர்ப்பது மட்டுமன்றி தன்னைப் பற்றிய புகைப்படங்கள் பத்திரிகைகளில் வெளிவருவதையும் விரும்பாதவர். பிரதம ஆசிரியர் என்ற வகையில் இவருக்கு வரும் தனிப்பட்ட அழைப்பிதல்களைக் கூட தன் கீழ் பணியாற்றும் பத்திரிகையாளர்களுக்கே கொடுப்பார். எவரெவருக்கு கொடுக்கவேண்டும் என்பதை தரமறிந்து பகிர்ந்தளித்து விமர்சன ஆக்கங்களை அவர்களிடமிருந்து பெற்று பட்டை தீட்டி பளிச்சிட வைப்பதில் திருப்தி கண்டு திறமைசாலிகளை மென்மேலும் ஊக்குவித்த ஊடகத்துறை ஜாம்பவான் தான் எஸ்.டி.சிவநாயகம் அவர்கள்.

இவரின் கீழ் பணியாற்றியவர்கள் சிலர் இவரது சிபார்சுக் கடிதத்துடன் வெவ்வேறு ஸ்தாபனங்களுக்கு வேலைக்குச் சென்ற போதும் கூடத் தேர்வு இன்றியே தெரிவானார்கள். அவர்களில் நானும் ஒருவன். இது அவருக்கும் அவரது நற்சான்றிதழுக்கும் கிடைத்த மதிப்பும் மரியாதையுமாகும்.

கடைசி காலத்தில், கவிஞர் கண்ணதாஸனைப் போன்று, நாஸ்திகனாக இருந்து ஆஸ்திகனாக மாறியவர். பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் ஆசியும், அவரிடமிருந்து மோதிரம் ஒன்றையும் பரிசாகப் பெற்று, கொழும்பிலுள்ள ஸ்ரீ சத்ய சாயி பாபா மத்திய நிலையத்தின் தலைவராகத் தொடர்ந்து 25 வருடங்கள் பணிபுரிந்தார். அப்போதுதான் இவர், சாயி பக்தனாக பல நிகழ்வுகளில் பங்கு பற்றி, இவரது புகைப்படங்கள் வெளியிடப்பட்டு, வாசகர்களுக்கு அடையாளம் காணப்பட்டார். இன்று இந்த சாயி ஸ்தாபனம், பாபாவின் பூரண ஆசியுடன், தலைநகரில் 55 வருடங்கள் பூர்த்தியடைந்து, அறங்காவளர் சபையுடன், மத்திய நிலையம் என்ற பெயருடன், நிலையான ஒரு சாயி நிலையமாக மிளிர்வதற்கு, இவர் போட்ட அத்திவாரமே முதல் காரணமாகும். ■

ஈழநாடு



# கருத்துச் சுதந்திரத்தை கட்டுப்படுத்த பயன்படும் தனிமைப்படுத்தல் சட்டம்!

## கடுமையாக சாடுகிறது மன்னிப்புச் சபை

கொழும்பு, ஜூலை 11

**இலங்கையில் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது தெரிவு செய்யப்பட்ட அடிப்படையில் தனிமைப்படுத்தல் சட்டம் பிரயோகிக் கப்பட்டிருப்பதானது, கருத்துச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துவதற்கான ஓர் கருவியாக அரசாங்கம் கொரோனா வைரஸ் பரவலைப் பயன்படுத்துவதை வெளிப்படுத்தியிருக்கிறது என்று சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.**

பொதுமக்கள் அதிகளவில் ஒன்றுகூடும் ஆர்ப்பாட்டங்கள், பொதுக்கூட்டங்கள், பேரணிகள் மறு அறிவித்தல்வரை தடை செய்யப்படுவதாக கடந்த செவ்வாய்கிழமை பொலிஸ் தலைமையகத்தினால் அறிவிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து கடந்த புதன் கிழமையிலிருந்து பலதரப்பட்ட கோரிக்கைகள் மற்றும் உரிமைகளுக்காகப் போராடுவோரைக் கைது செய்யும் நடவடிக்கைகளைப் பொலிஸார் தீவிரப்படுத்தியுள்ளனர்.

குறிப்பாக கடந்த வியாழக் கிழமை ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டவர்களைப் பொலிஸார் தூக்கிச்சென்று பொலிஸ் வண்டிகளில் ஏற்றும் புகைப் படங்கள் சமூகவலைத்தளங்களில்அதிகமாகப்பகிரப்பட்டன.

அதுமாத்திரமன்றி ஆர்ப் பாட்டங்களில் ஈடுபடுதல் தடை செய்யப்பட்டுள்ளமையானது, பொதுமக்களின் கருத்துச் சுதந்திரத்தையும் அரசாங்கத்தின் முறையற்ற செயற்பாடுகளை விமர்சிக்கும் சுதந்திரத்தையும் பறிப்பதாக அமையும் என்று பல்வேறு தரப்பினராலும் கண்டனங்கள் வெளியிடப்பட்டிருந்தன.

இவ்வாறானதொரு பின்னணியில் சர்வதேச மன்னிப்புச் சபையினால் அதன் உத்தியோக பூர்வ டுவிட்டர் பக்கத்தில் செய்யப்பட்டிருக்கும் பதிவிலேயே மேற்கண்டவாறு குறிப் பிடப்பட்டுள்ளது.

அப்பதிவில் மேலும் கூறப் பட்டிருப்பதாவது:

அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது தெரிவு செய்யப்பட்ட அடிப்படையில் தனிமைப் படுத்தல் சட்டம் பிரயோகிக் கப்பட்டிருப்பதானது, இலங்கை அரசாங்கம் கருத்துச்சுதந்திரத்தைக் கட்டுப் படுத்துவதற்கு இந்த கொரோனா வைரஸ் தொற்றுப்பரவலை ஓர் கருவியாகப் பயன்படுத்துவதை வெளிப்படுத்தியிருக்கின்றது.

நாட்டின் சுகாதாரப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக அரசாங்கம் புதிய சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டல்களை வெளியிடுவதாக இருந்தால், எந்தவொரு தரப்பினரையும் அடக்குமுறைக்கு உட்படுத்தாத வகையில் அனைவருக்கும் பொதுவானதாக அவ்வழிகாட்டல்களை நடைமுறைப்படுத்துவது அவசியமாகும்-என்றுள்ளது.



# கதிர்காமம் கிரிவெஹரவில் பிரதமர் மஹிந்த வழிபாடு!

கொழும்பு, ஜூலை 11

கதிர்காமம் கிரிவெஹரவுக்கு விஜயம் செய்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று முன் தினம் பிற்பகல் அங்கு வழிபாட்டில் ஈடுபட்டார்.

ருஹூணு மாகம் பத்துவே தலைமை சங்கநாயக்கர் கிரிவெஹர விகாராதிபதி கலாநிதி கொபவக தம்மிந்த தேரரிடம் நலன் விசாரித்த பிரதமர், அவரிடம் ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டார்.

அதனை தொடர்ந்து பிரதமர் மற்றும் பிரதமரின் பாரியார் திருமதி.ஷிரந்தி ராஜபக்ஷ உள்ளிட்டோர் கிரிவெஹர வழிபாட்டில் ஈடுபட்டனர்.

வணக்கத்திற்குரிய கொபவக தம்மிந்த தேரர் உள்ளிட்ட மஹா சங்கத்தினர் கிரிவெஹரவில் பிரித் பாராயணம் செய்து பிரதமரை ஆசீர்வதித்தனர்.

பிரதமருடனான சமய வழிபாட்டில் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ, ருஹூணு மஹா கதிர்காம ஆலயத்தின் பஸ்நாஹிர நிலமே டிஷான் விக்ரமரத்ன குணசேகர, முன்னாள் ஊவா மாகாண சபை உறுப்பினர் விமல் கலகம ஆராச்சி, கதிர்காமம் பிரதேச சபையின் தலைவர் சானக அமில் ரங்கண உள்ளிட்ட பிரதேச அரசியல்வாதிகள் பலர் கலந்து கொண்டனர்.

# 218 போத்தல் கோடாவுடன் கிளிநொச்சியில் ஒருவர் கைது

கிளிநொச்சி, ஜூலை 11

கிளிநொச்சி மாவட்ட மது ஒழிப்புப் பிரிவு பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கு அமைய நேற்று பெரிய குளம் கட்டைக்காடு பகுதியில் சட்டவிரோதமான முறையில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

அவரிடமிருந்து 218 போத்தல் கோடா, கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் உபகரணங்கள் என்பன கிளிநொச்சி மாவட்ட மது ஒழிப்புப் பொலிஸாரால் கைப்பற்றப் பட்டன.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவரும் கைதுசெய்யப்பட்டார் என கிளிநொச்சி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

# நான்கு இலட்சத்துக்கு மேற்பட்டோருக்கு சீரற்ற வானிலையால் மின்சாரம் இல்லை

கொழும்பு, ஜூலை 11

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக சுமார் 4 இலட்சத்து 75 ஆயிரம் வீடுகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதாக மின்சக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதுவரை மின் துண்டிப்பு குறித்து 12 ஆயிரம் முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாகவும் நிலைமையை சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் மின்சக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

காலி, மாத்தறை, கிரிபத் கொடை, கண்டி, பேராதனை, குளியாப்பிட்டி, குருநாகல், களனி, இரத்மலாலை, சிலாபம் ஆகிய இடங்களில் இவ்வாறு மின்சாரத் தடைப்பட்டுள்ளது.

இதேவேளை, நாட்டின் பல்வேறு பகுதிகளில் பலத்த மழை மற்றும் காற்று காரணமாக அனர்த்த சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

மரங்கள் வீழ்வு, மண்மேடு சரிவு போன்ற காரணங்களால் சில பாதைகளில் போக்குவரத்து துண்டிக்கப்பட்டதோடு, வீடுகளுக்கும் பாதிப்புக்குள்ளாகியுள்ளன.

(அ)

# தீ விபத்துக்கு உள்ளான கப்பலின் உள்நாட்டு முகவர் நிறுவன உறுப்பினர்கள் 7பேர் கைது

கொழும்பு, ஜூலை 11

கொழும்புத் துறைமுக கடற்பரப்பில் தீ விபத்துக்குள்ளான எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலின் உள்நாட்டு முகவர் நிறுவனத்தின் 7 உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலின் உள்நாட்டு முகவர் நிறுவனமான சீ கன்சோரிடியம் லங்கா பிரைவட் லிமிடட் நிறுவனத்தின் 7 உறுப்பினர்கள் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து கைது செய்யப்பட்ட 7 பேரையும் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

(அ)

# உரம் இறக்குமதிக்கு அனுமதியா? ஜனாதிபதி ஊடகப்பிரிவு மறுப்பு!

கொழும்பு, ஜூலை 11

இரசாயன உரம் இறக்குமதிக்கு அரசாங்கத்தால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது என வெளியாகும் செய்திகள் உண்மைக்கு புறம்பானவை என்று ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

இவ்வாறு எந்தவொரு அனுமதியும் வழங்கப்படவில்லை எனவும், எதிர்காலத்திலும் வழங்கப்படாது எனவும் அவர் கூறினார்.

(அ)



# எழுதுமட்டுவாளில் தென்னங்கன்று நாட்டும் நிகழ்வு நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 11

அரசினால் நாடு முழுவதும் 40 இலட்சம் தென்னங்கன்றுகள் நடும் வேலை திட்டத்தின் ஒரு அங்கமாக யாழ்.மாவட்டத்தில் வெற்றுக் காணிகளில் தென்னங்கன்று நடும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இராணுவக் கட்டளைத் தளபதிமேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவின் வழிகாட்டுதலின் கீழ் யாழ். பாதுகாப்பு படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் பிரியந்த பெரேராவின் நெறிப்படுத்தலின் கீழ் எழுதுமட்டுவாளில் உள்ள யாழ். ஆயருக்கு சொந்தமான காணியில் 700 தென்னங்கன்றுகள் நாட்டும் நிகழ்வு நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் யாழ். மறைமாவட்ட குரு முதல்வர் அருட்பணி. ஜெபரட்ணம் அடிகளார், யாழ் மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பிரியந்த பெரேரா, கியூடெக் நிறுவனத்தின் தலைவர் அருட்பணி யூயின் பிரான்சிஸ் அடிகளார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(அ)

# வட்டுவாகலில் கடற்படைக்கு காணி சுவீகரிக்க நடவடிக்கை!

முல்லைத்தீவு, ஜூலை 11

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட முள்ளிவாய்க்கால் கிழக்குக்கும் வட்டுவாகலுக்கும் இடைப்பட்ட பகுதியில் மக்களின் காணிகளை கடற்படையினருக்காக சுவீகரிப்பதற்காக எல்லை விவரங்களை அடையாளப்படுத்துமாறு காணி உரிமையாளர்களுக்கு நில அளவைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

கடந்த 8 ஆம் திகதியிடப்பட்ட கடிதம் முல்லைத்தீவு பிரதேச நில அளவைத் திணைக்களத்தின் அரச நில அளவையாளர் பா.நவஜீவனால் காணி உரிமையாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அதில், 2021 - 05 - 12ஆம் திகதியன்று முல்லைத்தீவு அரசாங்க அதிபர் மற்றும் கரைதுரைப்பற்று பிரதே செயலாளர்களுடனான கலந்துரையாடலின் அடிப்படையில், நிறுத்திவைக்கப்பட்டிருந்த நில அளவையானது காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 450) 05 ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் பிரகாரம் காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சின் கட்டளை நிமித்தம் நில அளவை நாயகத்தால் அளிக்கப்பட்ட கட்டளையின் பிரகாரம் முல்லைத்தீவு மாவட்ட கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட முள்ளிவாய்க்கால் கிழக்கு கிராம சேவையாளர் பிரிவின் முள்ளிவாய்க்கால் கிராமத்தில் அமைந்துள்ள காணியை பிரதான கடற்படை முகாம் அமைப்பதற்காக சுவீகரிக்கும் பொருட்டு நில அளவை செய்வதற்காக 29 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு வருகை தந்து தங்கள் காணிகளின் எல்லைகளையும் விவரங்களையும் இனங்காட்டுப்பம்டி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். மேலும் தங்களினது காணியை உறுதிப்படுத்தும் ஆவணத்தையும் ஆவணத்தின் பிரதி ஒன்றையும் எடுத்துவரும்படியும் கேட்டுக்கொள்கிறேன்-

என்று அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் குறித்த பகுதியில் 617 ஏக்கர் காணியை அளவீடு செய்வதற்கு முனைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையில் மக்களின் எதிர்ப்புக்கள் காரணமாக அந்த நடவடிக்கைகள் கைவிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# ஹொரணைக்கு மாறும் கொழும்பு சிறைச்சாலை

## ஜனாதிபதி கண்காணிப்பு விஜயம்

கொழும்பு, ஜூலை 11

பொரளையில் உள்ள சிறைச்சாலைக் கட்டடத் தொகுதியை மீளமைக்க முன்மொழியப்பட்டுள்ள ஹொரணை - மில்லேவ தோட்டத்துக்குச் சொந்தமான காணியை, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பார்வையிட்டார்.

சிதைவடைந்த பழைய கட்டடங்கள், அதிக நெரிசல் மற்றும் வேறு வெளிப்புறக் காரணிகளால், குறித்த சிறைச்சாலையை வேறு ஓர் இடத்துக்கு இடமாற்றம் செய்ய வேண்டிய தேவை, நீண்டகாலமாக இருந்து வருகிறது.

சிறைச்சாலைக் கட்டடத் தொகுதி மற்றும் அதன் தற்போதைய நிலை குறித்த வீடியோ விளக்கக் காட்சியொன்று முன்வைக்கப்பட்டதுடன், சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக் கைதிகள் புனர்வாழ்வு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தை இது பற்றி ஜனாதிபதிக்கு விளக்கினார்.

புதிய சிறைச்சாலைக் கட்டடத் தொகுதியை நிர்மாணிப்பதற்காக, நகர அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான ஹொரணை - மில்லேவ தோட்டத்திலுள்ள 200 ஏக்கர் நிலப்பரப்பு ஒதுக்கப்பட்டுள்ளது.

வெலிக்கடை சிறைச்சாலை, கொழும்பு தடுப்புக்காவல் சிறைச்சாலை, புதிய மகசின் சிறைச்சாலை, சிறைச்சாலை வைத்தியசாலை, பயிற்சிப் பாடசாலை, சிறைச்சாலை புலனாய்வுப் பிரிவு மற்றும் சமுதாயச் சீர்திருத்தத் திணைக்களம் ஆகியவை இந்த உத்தேச வளாகத்துக்குள் நிர்மாணிக்கப்பட உள்ளன.

முன்மொழியப்பட்டுள்ள சிறைச்சாலைத் திட்டத்தில், சிறைக் கைதிகளின் நலன் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக, நகர அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் நாலக கொடஹேவா தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து, சிறைச்சாலைக் கட்டடத் தொகுதி, சிறைச்சாலை வைத்தியசாலை, பயிற்சிப் பாடசாலை மற்றும் புலனாய்வுத் துறை ஆகியவற்றை நிர்மாணிப்பதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ள இடங்களை, ஜனாதிபதி பார்வையிட்டார்.

இதன்போது, ஜனாதிபதி அத்தோட்டத்தில் வசிப்பவர்களைச் சந்தித்து, அவர்களது விவரங்களைக் கேட்டறிந்தார். நிர்மாணப் பணிகள் காரணமாக அவர்கள் இழக்க நேரிடும் சொத்துக்களுக்கான இழப்பீடு மற்றும் வீடுகளைப் பெற்றுக் கொடுக்க, உடனடி நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

அமைச்சர்களான அலி சப்ரி, ரோஹித அபேகுணவர்தன, இராஜாங்க அமைச்சர்களான விதுர விக்ரமநாயக்க, ஜயந்த சமரவீர, பியல் நிஷாந்த, பாராளுமன்ற உறுப்பினர்களான சஞ்சீவ எதிரிமான்ன, அனுப பெஸ்குவல், லலித் எல்லாவல, அமைச்சின் செயலாளர்கள் மற்றும் அரச அதிகாரிகள் ஆகியோர், இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# தூவமோதர கங்கையில் நீராடிய மூவர் மாயம்

கொழும்பு, ஜூலை 11

கொஸ்கொட-தூவமோதர கங்கைக்கு நீராடச் சென்ற மூன்று பேர் காணாமல் போயுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

சம்பவத்தில் ஒரு வயோதிபரும் அவரது இரண்டு பேரன்மார்களுமே இவ்வாறு நீரில் மூழ்கிக் காணாமல் போயுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், காணாமல் போனவர்களை தேடும் பணியில் பிரதேச மக்களும் பொலிஸாரும் இணைந்து ஈடுபட்டனர்.

# சைக்கிள் - ஹன்ரர் விபத்தில் இரண்டு பெண்கள் காயம்!

யாழ்ப்பாணம், ஜூலை 11

கரந்தன் - ஊரெழு பிரதான வீதியில் மோட்டார் சைக்கிள்-ஹன்ரர் வாகனம் மோதியதில் இரண்டு பெண்கள் காயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இச்சம்பவம் நேற்று முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

ஞானவைரவர் வீதி ஒழுங்கை ஊடாக மோட்டார் சைக்கிளில் வைத்தியசாலைக்கு சென்று வீடு திரும்பியபோது கரந்தன் - ஊரெழு பிரதான வீதியில் திடீரென ஏறியபோது எதிரே வந்த ஹன்ரர் வாகனம் மோதியதால் மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் கீழே விழுந்துள்ளனர்.

அத்துடன் மோட்டார் சைக்கிள் ஹன்ரர் வாகனத்தின் பவரில் கொழுவியதால் இழுத்துச் செல்லப்பட்டு அருகில் உள்ள வீட்டின் மதிலை உடைத்து பாய்ந்து விபத்துக்குள்ளானது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த மூன்று பெண்களில் ஒரு பெண் 8 மாதக் கர்ப்பிணிப் பெண் என்பதுடன் 2 வயதுச் சிறுமியும் பயணித்துள்ளனர். காயமடைந்த இரண்டு பெண்கள் உடனடியாக அம்புலன்ஸ் மூலம் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். 2 வயது சிறுமி காயங்களின்றி தப்பியுள்ளார். (அ)

# மஹிந்த-ரணில் சந்திப்பு; விளக்கமளித்தது ஐ.தே.க

கொழும்பு, ஜூலை 11

பிரதமர் மிஹிந்த ராஜபக்ஷ மற்றும் ஐ.தே.க தலைவர் ரணில் விக்கிரமசிங்க இருவரும் ஒன்றாக உணவருந்தும் புகைப்படங்கள் சமூக ஊடகங்களில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில், அது குறித்து ஐ.தே.க விளக்கமளித்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை இரவு நடைபெற்ற அந்த சந்திப்பு, இரகசியமான ஒரு அரசியல் விவாதமல்ல என ஐ.தே.க தெளிவுபடுத்தியுள்ளது.

“மஹிந்த ராஜபக்ஷ மற்றும் ரணில் விக்ரமசிங்க இருவரும் கொழும்பு 3 , 5ஆவது பாதையில், விக்ரமசிங்கவின் அயல் வீட்டில் நடந்த பிறந்தநாள் விழாவில் கலந்துகொண்டனர். அவர்கள் அரசியல் பற்றி குறிப்பாக அமைச்சரவை மறுசீரமைப்பு தொடர்பில் ஒருபோதும் விவாதிக்கவில்லை. பிரதமரின் கீழ் வரும் நிறுவனங்களை மாற்றுவது தொடர்பிலும் விவாதிக்கவில்லை” என்று ஐ.தே.க தெரிவித்துள்ளது.

(அ)

# மேலும் சில அரசியல் கைதிகள் ஜனவரி மாதத்துக்குள் விடுதலை

கொழும்பு, ஜூலை 11

எதிர்வரும் ஜனவரி மாதத்திற்குள் இன்னுமொரு தொகுதி கைதிகளை விடுதலை செய்வதற்கு தாயாராக இருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் சுரேன் இராகவன் தெரிவித்தார்.

வவுனியா மாவட்டத்திலுள்ள நகர சபை மற்றும் பிரதேச சபைகளின் சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுக்கும் பாராளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவனுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று வவுனியாவில் இடம்பெற்றது.

இதன்பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வன்னி மாவட்டத்தில் பொருளாதார, அரசியல் சமூக பிரச்னைகள் இருக்கின்றன. இவற்றை கட்சி ரீதியான பிரிவினைகளை பார்த்து, செய்தால் மக்களுக்கு நன்மை செய்யமுடியாமல் போகும். தேர்தல் காலத்தில் அரசியல் செய்வது வழக்கமான விடயம். ஆனால் தேர்தலுக்கு அப்பாற்பட்டு ஜனநாயகத்தை நிலைநிறுத்தவேண்டும் என்ற நிலைப்பாட்டில்நான் இருக்கின்றேன்.

வன்னி மாவட்ட மக்கள் கொரோனா நோய்த் தாக்கத்தில் குறைந்தளவில் பாதிக்கப்பட்டுள்ளமை மகிழ்ச்சியளிக்கின்றது. மக்களின் பொறுப்புணர்ச்சியினாலேயே அது நடந்துள்ளதென நம்புகிறேன். அடுத்த வாரம் இந்த மக்களுக்கான தடுப்பூசி ஏற்றும் செயற்பாடு இடம்பெறும். குறிப்பாக வன்னியில் உள்ள குளங்களை திருத்தவேண்டும். கமத்தினூடாக எமது பொருளாதாரம், மற்றும் சமூகம், வளர்ச்சியடைய இலகுவான வழி அதுவே.

அத்துடன் இயற்கை உரங்களை பயன்படுத்தி விவசாயம் செய்யும் கேந்திரமாக இலங்கை மாறியிருப்பதாக ஐக்கிய நாடுகளும், ஐரோப்பிய ஒன்றியமும் ஏற்றுக்கொண்டுள்ளது. எமது மக்கள் நோயின்றி நலமாக வாழவேண்டும் என்று எடுத்த முயற்சியில் சில தடைகள் ஏற்பட்டது உண்மையே. சில பொருளாதார திட்டங்களை ஏற்படுத்தும்போது தடைகள் ஏற்படும்.

இதேவேளை, கைதிகள் தொடர்பில் நான் எடுத்த முயற்சி காரணமாக 16 கைதிகளை அண்மையில் விடுதலை செய்திருக்கிறோம். இதன் பணி மேலும் தொடரும். எதிர்வரும் ஜனவரி மாதத்திற்குள் இன்னுமொரு தொகுதி கைதிகளை விடுதலை செய்வதற்கு தாயாராக இருக்கிறோம். அவர்கள் விடுதலை பெறவேண்டும்.

அவர்கள் பிழை செய்திருக்கலாம். அவர்கள் கொண்ட நோக்கத்துடன் அவர்கள் செய்தது அரசுக்கோ அல்லது நீதிக்கோ பிழையாக இருக்கலாம். ஆனால் போர் முடிந்து 11 வருடங்களுக்கு பின்னர் பொது மன்னிப்பு கொடுத்து அவர்கள் வாழ வழிவிடப்படவேண்டும் என்பதில் ஆழமான நம்பிக்கை கொண்டவன்நான். அத்துடன் காணாமல்போனோர் தொடர்பாக பாராளுமன்றத்தில் புதிய சீர்திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது. காணாமல் போனோருக்கான நிலையம் முழுமையாக இயங்கும் வகையில் தடைகளை நீக்கியிருக்கின்றோம்.

உடைந்த உறவினை வளர்த்தெடுத்து சமாதானத்தின் பாதையில் செல்லவேண்டும். நியாயமான விடயத்திற்காக இந்த நாட்டை வளர்த்தெடுக்கவேண்டும்.

இலங்கை அரசு பொருளாதார நெருக்கடியில் இருப்பது என்பதனை மறுக்கக் கூடாது. அதனை மறைப்பதில் ஒரு பலனும் இல்லை. எனவே பஸில் மீது இருக்கும் நம்பிக்கை மூலமாக பொருளாதார நெருக்கடியில் இருந்து வெளிவரக்கூடிய திட்டங்களை எடுப்பதற்கான முழுமையான பொறுப்பை கொடுக்கவேண்டும் என்று அரசாங்கம் முன்வந்துள்ளது.எதிர்வரும் ஆறு மாதங்களுக்குள் அவரது வருகையின் நன்மையை நாங்கள் எதிர்பார்த்துள்ளோம். அவர் செய்வார் என்ற ஆழமான நம்பிக்கை எனக்கு இருக்கின்றது - என்றார்.



# உள்நாட்டில் எழுச்சி ஏற்பட்டாலேயே சர்வதேச அழுத்தங்கள் பயனளிக்கும்!

நா. யோகேந்திரநாதன்




அண்மையில் ஐரோப்பிய ஒன்றியத்தின் பாராளுமன்றத்தில் இலங்கையில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்காவிடில் இலங்கைக்கான ஜீ.எஸ்.பி. வரிச்சலுகை நிறுத்தப்படவேண்டுமென எடுக்கப்பட்ட தீர்மானம் தொடர்பாக பல்வேறு தரப்பினராலும் பல கருத்துக்கள் ஆதரவாகவும் எதிராகவும் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

அதேவேளையில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் சில திருத்தங்களை மேற்கொள்வது தொடர்பாக ஆராய ஜனாதிபதியால் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளதாகச் சில தகவல்கள் வெளிவந்துள்ளன. ஐரோப்பிய ஒன்றியத்தின் தீர்மானம் அது நீக்கப்படுவது பற்றியதாக அமைந்திருந்ததேயொழிய அதைத் திருத்துவது பற்றியல்ல என்ற போதிலும் இப்படியான ஒரு குழு அமைக்கப்படுவது காலத்தை இழுத்து விடயத்தை நீர்த்துப் போக வைக்கும் ஒரு முயற்சியாக இருக்க முடியுமோ என்ற சந்தேகம் எழத்தான் செய்கிறது.

இது தொடர்பாகப் பொதுசன பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர கருத்து வெளியிடுகையில், நாட்டில் பயங்கரவாதத் தடைச் சட்டம் அமுலில் இருப்பதாலேயே பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களையும் துணை போனவர்களையும் கைது செய்ய முடிந்தது எனவும் அதை நீக்கும்படி ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்துவது ஒரு மனிதாபிமானமற்ற செயல் எனவும் தெரிவித்துள்ளார். மனிதாபிமானம் தொடர்பாக அவர் கொண்டிருக்கும் அர்த்தத்தைப் பொறுத்தவரை அவர்கள் இச்சட்டத்தைக் கைவிடப்போவதில்லை என்பது தெளிவாகிறது. அப்படித் தவிர்க்க முடியாத நிலையில் நீக்கினாலும் இதன் சில சரத்துகள் வேறு சட்டங்களுக்கு உட்புகுத்தப்படும் என்பது நிச்சயம்.

அதேவேளையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் இலங்கை பயங்கரவாதச் சட்டத்தை இரத்துச் செய்யவேண்டுமென நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைத் தாம் வரவேற்பதாகவும் இலங்கைத் தமிழர்களை ஏமாற்றியதைப் போன்று சர்வதேச சமூகத்தையும் ஏமாற்றலாம் என அரசு நினைத்தால் அது மிகப் பெரும் தவறெனவும் இன்று சர்வதேச சமூகத்தை ஏமாற்றமுடியாத இக்கட்டான நிலையிலேயே இலங்கை அரசு உள்ளதெனவும் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே பல வருடங்களுக்கு முன்பே ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை 36/1 தீர்மானத்தின் பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படவேண்டும் என்பது ஒரு முக்கிய விடயமாக உள்ளடக்கப்பட்டிருந்தது. இத்தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு இலங்கை அரசாங்கமும் அனுசரணை வழங்கியிருந்தது. மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியாகவும் ரணில் விக்ரமசிங்கவைப் பிரதமராகவும் கொண்டிருந்த அந்த அரசாங்கம் நான்கரை வருடங்கள் ஆட்சியிலிருந்தபோதும் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தை அமுலாக்கும் வகையில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கவில்லை. மாறாக அதற்குப் பதிலாக பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் என வேறு ஒரு சட்டத்தைக் கொண்டு வரப்போவதாக அறிவித்தது. ஆனால்அது கூட நிறைவேற்றப்படவில்லை.

அந்த நல்லாட்சி அரசாங்க காலத்தில் இரா.சம்பந்தன் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக விளங்கினார். அப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப் பினர் எதிர்க்கட்சியாயிருந்த போதிலும் சகல விடயங்களிலும் அரசாங்கத்துக்கு ஒத்து ழைப்பு வழங்குபவர்களாகவே விளங்கினர்.

வரவு - செலவுத் திட்டங்கள், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை போன்ற விடயங்களில் அரசாங்கத்துக்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்கி அரசாங்கத்தைக் காப்பாற்றி வந்தனர். அத்தகைய நடவடிக்கைகளை எதிர்த்த சுரேஷ் பிறேமச்சந்திரன் அணியினரைத் திட்டமிட்டு ஓரங்கட்டி கூட்டமைப்பை விட்டு வெளியேற வைத்தனர்.

தங்களது கட்சி உடைந்து பலவீனமடைவதைக் கூடப் பொருட்படுத்தாமல் ரணில் அரசுக்கு ஆதரவு வழங்கினர். இறுதியில் ரணிலின் அமைச்சரவை கலைக்கப்பட்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அமைச்சரவையை உரு வாக்கியபோது வழக்காடி மீண்டும் ரணிலை அரியாசனமேற்றியதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குப் பெரும் பங்குண்டு.

இவ்வளவுதூரம் ஐக்கிய தேசியக் கட்சியுடனும் ரணிலைப் பிரதமராகக் கொண்ட அரசாங்கத்துடனும் ஒட்டி உறவாடிய போதும் அந்த அரசாங்கத்தின் மூலம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ஏன் நீக்க வைக்க முடியவில்லை? ஏன் அரசியல் கைதிகளுக்கு ஜனாதிபதியால் பொது மன்னிப்பளிக்க வைக்க முடியவில்லை?

அப்படியானால் நல்லாட்சி அரசாங்கமும் அதற்கு ஆதரவு வழங்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றாமல் இழுத்துப் பறித்து ஏமாற்றவில்லையா என்ற கேள்வி எழத்தான் செய்கிறது.

நல்லாட்சி அரசாங்கம் 31/1 தீர்மானத்துக்கு அனுசரணை வழங்கியதன் மூலம் 2010 ஆம் ஆண்டில் நிறுத்தப்பட்ட ஜி.எஸ்.பி. சலுகையை மீண்டும் ஐரோப்பிய ஒன்றியத்திடமிருந்து பெற்றுக்கொண்டது. காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரங்கைள ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க திருமதி சந்திரிகா தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. ஆனால் அதுவும் செயல்படவில்லை. பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கி பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் கொண்டு வரப்படவுள்ளதாகக் கூறப்பட்டது. அதுவும் நிறைவேற்றப்படவில்லை. போர்க் குற்றங்கள் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரணைகளை நடத்த எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையால் மேற் படி தீர்மானங்களை நிறைவேற்ற தலா இரண்டு வருடங்கள் படி இரு தடவை கள் கால அவகாசம் வழங்கப்பட்டது. பல எதிர்ப்புகள் மத்தியில் இவ்வாறு கால அவகாசங்கள் வழங்குவதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாரிய ஆதரவை வழங்கியது.

எதுவுமே நிறைவேற்றப்படாமல் 5 வருடங்கள் நல்லாட்சி அரசு இழுத்துப் பறித்துவிட்டு தன் ஆட்சியை முடித்துக் கொண்டது. அடுத்து ஆட்சிக்கு வந்த கோட்டாபய அரசு மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்திலிருந்து வெளியேறி விட்டது.

நல்லாட்சி அரசாங்கத்தில் ஐரோப்பிய ஒன்றியத்தால் கால அவகாசம் வழங்கப்பட்டதேயொழிய தீர்மானங்களை நிறைவேற்றும்படி அழுத்தம் கொடுக்கவில்லை. அதற்கு முக்கிய காரணம் சீபா உடன்படிக்கை, மிலேனியம் சவால் போன்ற மேற்குலகை இலங்கையில் கால் பதிப்பதற்கான கதவுகளை திறப்பதற்கான வழிவகைகளை நல்லாட்சி அரசாங்கம் மேற்கொண்டது.

எப்படியிருப்பினும் நல்லாட்சி அரசாங்க காலத்தில் பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவது அரசியல் கைதிகளையும் பொது மன்னிப்பில் விடுதலை செய்வது, காணாமற் போனோர் விவகாரத்துக்குத் தீர்வு காண்பது போன்ற விடயங்களை நிறைவேற்றப் போதிய வாய்ப்பிருந்தும் அதை நிறைவேற்றவில்லை.

அவற்றை நல்லாட்சி அரசாங்கம் நிறைவேற்ற வைக்கத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் சக்தியும் சந்தர்ப்பமும் கிடைத்தபோதும் அவர்களும் அதைப் பயன்படுத்தவில்லை. அப்படியானால் தமிழ் மக்களையும் சர்வதேசத்தை ஒரே நேரத்தில் ஏமாற்றியவர்கள் யார் என்பதை எம்மால் புரிந்து கொள்ள முடியும்.

தற்போதைய அரசாங்கம் தமிழ் மக்களையோ சர்வதேசத்தையோ ஏமாற்றுகிறது என்பது வெறும் கற்பனை. அவர்கள் தமிழ் மக்கள் மீது எவ்வித ஒளிவு மறைவுமின்றி ஒடுக்குமுறை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதுடன் அவர்கள் ஆட்சிக்கு வந்ததுமே மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்துக்கான ஆதரவை விலக்கிக் கொண்டு விட்டார்கள். அவர்கள் ஏமாற்றுகிறார்கள் என்று சொல்லமுடியுமா?

ஆனால் கடந்த நல்லாட்சி அரசாங்க காலத்தில் ரணில், சம்பந்தர், சுமந்திரன் ஆகியோர் சர்வதேசத்தையும் தமிழ் மக்களையும் ஏமாற்றினர் என்பது அழிக்க முடியாத வரலாறு. எனவே, தமிழ் தலைமைகள் ஐக்கிய தேசியக் கட்சியையோ அல்லது தேசிய மக்கள் சக்தியையோ ஆட்சிக்குக் கொண்டு வருவதை மட்டுமே இலக்காக வைத்து அரசியல் செய்யாமல் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளை விசுவாசத்துடன் கையிலெடுத்து அரசியல் செய்வதே இன்று எம்முன் உள்ள ஒரே மார்க்கமாகும்.

உள்நாட்டில் எழுச்சி ஏற்படும்போது மட்டுமே வெளிநாடுகளின் அழுத்தங்கள் முழுமையான பயனளிக்கும் நிலை உருவாகும் என்பது புரிந்து கொள்ளப்பட வேண்டும். - **நன்றி - அருவி** ■

**"நல்லாட்சி அரசாங்கத்தில் ஐரோப்பிய ஒன்றியத்தால் கால அவகாசம் வழங்கப்பட்டதேயொழிய தீர்மானங்களை நிறைவேற்றும்படி அழுத்தம் கொடுக்கவில்லை. அதற்கு முக்கிய காரணம் சீபா உடன்படிக்கை, மிலேனியம் சவால் போன்ற மேற்குலகை இலங்கையில் கால் பதிப்பதற்கான கதவுகளை திறப்பதற்கான வழிவகைகளை நல்லாட்சி அரசாங்கம் மேற்கொண்டது.**

# தொற்றிலிருந்து பாதுகாத்து கொள்ளவும் நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்கவும் யோகாசனங்களும் வர்மப் புள்ளிகளும்

■ வைத்திய கலாநிதி
செ.போல்ரன் றஜீவ்

வைரஸ், பக்டீரியா போன்றவற்றின் தொற்று பெருகி வரும் இக்காலகட்டத்தில், நாம் எம்மை பாதுகாத்துக்கொள்வது என்பது மிக முக்கியமானவொன்றாகும். இதிலும் மருந்தில்லா மருத்துவத்தின் தேடலின் பெறுதிகளான சித்த மருத்துவத்தின் சொத்துக்களான யோக மருத்துவம் மற்றும் வர்மமருத்துவம். நுண்ணுயிர்களின் தொற்றுநோயிலிருந்து பாதுகாத்துக் கொள்ளவும், நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்கவும் இந்த சித்த மருத்துவத்தின் மருந்தில்லா மருந்துவங் களான யோக மருத்துவம் மற்றும் வர்மமருத்துவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் பற்றி ஆராய்வோம்.

யோகமருத்துவத்தில்:

பொதுவாக வைரஸ், பக்டீரியா போன்றவற்றின் தொற்றுநோய்கள் சுவாசத்துடன் தொடர்புடையதால், சுவாசத்தொகுதியுடன் தொடர்புடைய ஆசனங்களையும், மூச்சுப்பயிற்சிகளையும் மேற்கொள்வது பொருத்தமானதாகும்.

**யோகாசனங்கள்:**

1. சூரிய நமஸ்காரம் (12 ஆசனங்கள்)
2. அர்த்தகட்டி சக்ராசனம்
3. உஷ்டாசனம்
4. புஜங்காசனம்
5. சக்ராசனம்
6. பர்வட்டாசனம்
7. யோகமுத்ரா


நுரையீரலைப்பலப்படுத்தும் மற்றும் நுரையீரலின் முழுகொள்ளவிற்கும் காற்று உட்சென்று வெளிவருவதை உறுதிப்படுத்தும் ஆசனங்களை செய்தல் வேண்டும்.

**மூச்சுப்பயிற்சிகள்:**

1. பஸ்திரிக்கா
2. பிரம்மரி பிராணாயாமம்
3. நாடிசுத்தி பிராணாயாமம்
4. கபாலபதி

போன்ற மூச்சுப்பயிற்சிகளையும் இதைவிட நுரையீரலின் முழுகொள்ளவிற்கும் காற்று உட்சென்று வெளிவருவதை உறுதிப்படுத்தும் மூச்சுப்பயிற்சிகளையும் செய்ய வேண்டும்.

தினமும் அதிகாலையில் (4.30 - 6.00) யோகாசனங்களையும், மூச்சுப் பயிற்சிகளையும் காற்றோட்டமான இடத்தில் அல்லது திறந்த வெளியில் தனித்தனியாக மனம் ஒருநிலைப்படுத் திச் செய்தல் மிக்க பலனைத்தந்து, உங்கள் நோயெதிர்ப்பு சக்தியை அதிகரித்தும், நுண்ணு யிர்களின் தொற்றுநோயி லிருந்து பாது காத்துக் கொள ளவும் வழிவகை செய்கின்றமை கடந்த ஒரு வரு டத்தில் கண்டு கொண்ட அனுபவமுறை யாகும்.



**வர்மத்தின் பெயர்கள்**


1. திலர்த காலம்
2. நட்சத்திர காலம்
3. செவிக்குத்திக் காலம்
4. உறக்கக் காலம்
5. தும்மிக் காலம்
6. நேர் வர்மம்
7. அடப்பக்காலம்
8. உறுமிக் காலம்
9. வலிய அத்திச் சுருக்கிக் காலம்
10. சிறிய அத்திச் சுருக்கிக் காலம்
11. கல்லடைக் காலம்
12. கண்ணாடிக் காலம்
13. கொண்ட கொல்லி
14. மூளை வர்மம்
15. கூம்பு வர்மம்
16. கதிர் வர்மம்
17. எட்டுமுக வர்மம்
18. மேல் சங்குதிரி வர்மம்
19. முண்டெல்லு வர்மம்
20. மூத்திர காலம்
21. வித்து வர்மம்
22. குருந்து குத்தி வர்மம்
23. காரீரல் வர்மம்
24. அலவாடி வர்மம்
25. விலங்கு வர்மம்
26. சுளுக்கு வர்மம்
27. கை முட்டு வர்மம்
28. மொழியின் வர்மம்
29. மணிபந்த வர்மம்
30. துதிக்கை வர்மம்
31. சொர்ணதெட்சணையின் காலம்
32. பதக்கால் வர்மம்
33. துண்டு வர்மம்
34. கால் முட்டு வர்மம்
35. பக்க வர்மம்
36. கண்ணு வர்மம்
37. நாய்த் தலை வர்மம்
38. குதிரை முக வர்மம்
39. கொம்பேறி வர்மம்
40. கோணச் சன்னி
41. பாதச் சக்கரம்
42. திட வர்மம்
43. பூழிக் காலம்
44. அடங்கல் வர்மம்

**குறிப்பு :**

(1) முதல் 11 வர்மங்களும் படு வர்மப் பகுதிகளாகும்.ஏனையவை தொடு வர்மப் பகுதிகளாகும்.

(2) '12' என்ற எண் இரு இடத்தில் குறிக்கப்பெற்றுள்ளது, காரணம், இவ்வர்மப் பகுதியை, வைத்தியர்கள் இவ்விரு இடங் களிலும் குறிப்பிடுகின்றனர்.

(3) இப்படத்தில் மனித உட லில் இடப்பக்கத்தில் வர்மங்கள் சுட்டப்பட்டுள்ளன. இதுபோன்றே வலப்பக்கத்திலும் வர்மங்கள் உள்ளன.




வர்மமருத்துவத்தில்:

1. விலங்கு வர்மம்
2. அடப்பகாலம்
3. கைக்கவுளி வர்மம்
4. உள்ளங்கை வெள்ளை வர்மம்
5. திலர்த்தகாலம்
6. கொண்டைக்கொல்லி வர்மம்
7. சிப்பிவர்மம்
8. புலிமுத்து அடங்கல்
9. கால்கவுளி வர்மம்

போன்றவற்றை தினமும் காலை, மாலை என ஓய்வாக இருக்கின்றபோது காற்றோட்டமான இடத்தில் கால்களை பக்கத்திற்கு பக்கம் வைத்து மூச்சைத்தியானத்திலிருத்தி அரை மாத்திரை பிரமாணம் அமுத்தம் கொடுத்தல் மிக்க பலனைத்தரும்.

படத்தில் காட்டப்பட்ட இடங்களில் அம்புக்குறி காட்டியபடியாக அருத் தத்தைக் கொடுக்கவேண்டும். அம்புக்குறிக்குக் கீழே தரப்பட்ட "n" வடிவஅடை யாளம் அமுத்தம் கொடுக்கும் விரலைக்குறிக்கின்றது. "n" ஒரு விரலால் அமுத்தம் கொடுக்க வேண்டும் இதற்காக பெரு விலலையோ, நடுவிரலையோ பயன்படுத்த வேண்டும். "n n n" மூன்று விரல்களால் அமுத்தம் கொடுக்க வேண்டும்.

மேற்குறிப்பிட்ட வர்மப்புள்ளிகளில் அடப்பகாலம் சிலரால் மாத்திரம் தமக்குத்தானே செய்துகொள்ள முடியும்.

அதேவேளை அடப்பகாலம், சிப்பிவர்மம் என்பன ஒருவர் இன்னொருவருக்குச் செய்து கொள்ள வேண்டிய வர்மப்புள்ளிகளாகும். ஒருவர் மற்றவருக்குச் செய்யும் போது இருவருமே கண்டிப்பாக முகக்கவசம் அணிந்து செய்வது இருவருக்கும் நல்லது. அதோடு ஒருவரின் பின்புறமிருந்து இவற்றைச் செய்வது சிறந்ததாகும்.

இவ்வர்மப்புள்ளிகளில் ஏதேனும் சந்தேகம் ஏற்படின், அருகிலுள்ள சித்த மருத்துவரை நாடவும். அவர்களிடம் வர்மப்புள்ளிகளை சரியான இடத்தினை அடையாளப் படுத்திக் கொள்ள தவற வேண்டாம்.

இந்த வர்மப்புள்ளி தூண்டலும் உங்கள் நோயெ திர்ப்பு சக்தியை அதிகரித்தும், நுரையீரலின் கொள் ளளவையும் பிராணவாயுவின் - ஒட்சிசனின் அளவையும் அதிகரிக்கச்செய்து, நுண்ணுயிர்களின் தொற்றுநோயிலி ருந்து பாதுகாத்துக் கொள்ளவும் வழிவகை செய்கின்றமை கடந்த ஒரு வருடத்தில் யோகாசனத்தைப் போன்று இதுவும் கண்டு கொண்ட அனுபவமுறையாகும்.

எனவே மேற்குறிப்பிட்ட சித்த மருத்துவத்தின் மருந் தில்லா மருந்துவங்களான யோக மருத்துவம் மற்றும் வர்மமருத்துவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங் களைப்பின்பற்றி, நுண்ணுயிர்களின் தொற்றுநோயி லிருந்து பாதுகாத்துக் கொள்ளவும், நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்கவும் இவற்றை இன்றிலிருந்தே பின்பற்றுவோம். இவற்றில் ஏதேனும் சந்தேகங்கள் இருப்பின் அருகிலுள்ள சித்த மருத்துவரை நாடி, உங்கள் கேள்விகளைத் தெளிவு படுத்திக் கொண்டு மற்றவ ருக்கும் தெரியப்படுத்தி நீங்களும், உங்கள் குடும்பம், சமூகத்தையும் பாதுகாத்துக்கொள்வோம். ■

# சீனா எதிர் இந்தியா

# இலங்கையின் உண்மையான நண்பன் யார்?

**“ இந்தியாவின் வெளியுறவு கொள்கையில் காணப்படுகின்ற பாரிய இடைவெளியே, இலங்கை உள்ளிட்ட ஆசிய நாடுகள் இந்தியாவை அண்மிக்காது, சீனாவை நோக்கி நகர்வதற்கான பிரதான காரணம்.**

ரஞ்சன் அருண் பிரசாத்

சீனாவே தமது உண்மையான நண்பன் என இலங்கை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வெளியிட்ட கருத்து, தெற்காசிய பிராந்திய அரசியலில் பேசு பொருள் ஆகியுள்ளது.

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் 100ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்துக்கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்.

அதுமாத்திரமன்றி, சீன கம்யூனிஸ்ட் கட்சியின் நூற்றாண்டு விழாவை நினைவு கூரும் வகையில், நாணயமொன்றையும் இலங்கை மத்திய வங்கி அண்மையில் வெளியிட்டிருந்தது.

இவ்வாறான நிலையில், ஏனைய உலக நாடுகளை விடவும் இலங்கை அரசாங்கம் ஏன் சீனாவை உண்மையான நண்பனாக ஏற்றுக்கொள்கின்றது என்ற கேள்வி எழுந்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் அரசி யல் ஆய்வாளர் வீ.ஜனகனிடம் பிபிசி தமிழ் வினவியது.

இலங்கையின் உண்மையான நண்பன் சீன என பிரதமர் மஹிந்த ராஜபக்ச கூறியதில் எந்தவித மாற்றமும் கிடையாது என அவர் கூறுகின்றார்.

அது மாத்திரமன்றி, ஆசியாவை வழிநடத்த போவது சீன எனவும் பிரதமர் மஹிந்த ராஜபக்ச கூறியதையும் அவர் இதன்போது நினைவுபடுத்தினார்.

ஆசியாவை வழிநடத்த போவது சீனா என்பது, மறைக்க முடியாத உண்மை எனவும் அவர் குறிப்பிடுகின்றார்.

மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மாத்திரமன்றி, ஆசியாவிலுள்ள பல நாடுகளின் கட்சிகள் இன்று சீனாவின் அனுசரணையின் கீழ் செயற்பட்டு வருவதாகவும் அவர் கூறுகின்றார்.

பாகிஸ்தானின் ஆளும் கட்சிக்கும், சீன கம்யூனிஸ்ட் கட்சிக்கும் இடையில் உடன்படிக்கைகள் காணப்படுகின்ற நிலையில், பாகிஸ்தானின் எதிர்கட்சியும், சீன கம்யூனிஸ்ட் கட்சியுடன் இணைந்து செயற்பட விருப்பம் தெரிவித்துள்ளதாக அவர் குறிப்பிடுகின்றார்.

மேலும், நேபாளம் மற்றும் வங்க தேசம் ஆகிய நாடுகளும் இன்று சீனாவை நோக்கி நகர்ந்து வருவதாக அவர் தெரிவிக்கின்றார்.

அதேபோன்று, இந்தியாவின் காங்கிரஸ் கட்சியும், 2008ஆம் ஆண்டு சீன கம்யூனிஸ்ட் கட்சியின் அங்கத்துவத்தை பெற்றுக்கொண்டுள்ளதாக அவர் கூறுகின்றார்.

(இரு கட்சிகளின் உயர்மட்ட பேச்சுவார்த்தை தொடர்பாக 2008 இல் இந்திய தேசிய காங்கிரஸ் மற்றும் சீன கம்யூனிஸ்ட் கட்சி இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கையெழுத்தானது.)

இவ்வாறான காரணங்களை அடிப்படையாக வைத்து பார்க்கும் போது, ஆசிய கண்டத்தை வழிநடத்தும் நாடாக சீனா இருக்கும் என்பதில் எந்தவித சந்தேகமும் கிடையாது என வீ.ஜனகன் தெரிவிக்கின்றார்.

சீனாவுடன் இந்தியாவின் காங்கிரஸ் கட்சி ஆரம்பித்த உறவுகளே, இன்று ஆசிய நாடுகளின் ஏனைய நாடுகளும் அதே உறவுகளை முன்னெடுத்து வருவதாக அவர் குறிப்பிடுகின்றார்.

இவ்வாறான நிலையில், சீனா, இலங்கையின் உண்மையான நட்பு நாடு என மஹிந்த ராஜபக்ச கூறுவதில் எந்தவித தவறும் கிடையாது என கூறிய அவர், மஹிந்த ராஜபக்ச தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, சீன கம்யூனிஸ்ட் கட்சியின் அங்கத்துவ கட்சி மாத்திரமன்றி, நட்பு கட்சி எனவும் குறிப்பிட்டார்.

### இந்தியாவிற்கு நெருங்கிய உறவு பேண வேண்டிய தேவை

இந்தியாவை அண்மித்துள்ள அனைத்து நாடுகளுடனும் நெருங்கிய உறவுகளை பேண வேண்டிய தேவை இந்தியாவிற்கு காணப்படுகின்ற போதிலும், அந்த உறவை மேம்படுத்திக் கொள்ள முடியாத நிலைமை உள்ளதாக அரசியல் ஆய்வாளர் வீ.ஜனகன் தெரிவிக்கின்றார்.

இந்தியாவின் வெளியுறவு கொள்கையில் காணப்படுகின்ற பாரிய இடைவெளியே, இலங்கை உள்ளிட்ட ஆசிய நாடுகள் இந்தியாவை அண்மிக்காது, சீனாவை நோக்கி நகர்வதற்கான பிரதான காரணம் என அவர் குறிப்பிடுகின்றார்.

இந்தியாவை அண்மித்துள்ள நாடுகள், இந்தியாவுடன் நெருங்கிய உறவுகளை பேண வேண்டும் என்ற போதிலும், அவ்வாறு இருக்கின்றதா என கேள்வி எழுப்பினால் இல்லை என்றே பதிலளிக்க வேண்டியுள்ளதாகவும் அவர் கூறுகின்றார்.

இந்தியாவின் வெளியுறவு கொள்கை காரணமாக, இந்தியாவை அண்மித்துள்ள நாடுகள் அனைத்தும் இந்தியாவை நம்ப தயாராக இல்லை என அவர் குறிப்பிடுகின்றார்.

இந்தியாவின் மீது, இலங்கை உள்ளிட்ட நாடுகள் நம்பிக்கையை இழந்துள்ள சந்தர்ப்பத்தில், நம்பிக்கையை வழங்கக்கூடிய ஒரு நாடு முன்வருமாக இருந்தால், அந்த நாட்டிற்கு ஆதரவாக செயற்பட வேண்டிய கட்டாயம் ஏற்படும் எனவும் அவர் தெரிவிக்கின்றார்.





இலங்கையில் மாற்றம் வருகின்றதோ இல்லையோ, இந்தியாவின் வெளியுறவு கொள்கையில் விரைவில் மாற்றத்தை ஏற்படுத்தினால் மாத்திரமே, இந்து சமுகத்தை, சைனா சமுத்திரமாக மாறுவதிலிருந்து காப்பாற்ற முடியும் என அரசியல் ஆய்வாளர் வீ.ஜனகன் தெரிவிக்கின்றார்.

இது இந்து சமுத்திரத்தை கைப்பற்றுவதற்கான போர் எனவும், இது நீருக்கான போர் எனவும் அவர் குறிப்பிடுகின்றார்.

சீன சமுத்திரம் (சைனா ஓசேன்) என்ற பெயர் விரைவில் ஏற்படுவதற்கான சாத்தியம் எழுந்துள்ளதாகவும் அவர் கூறுகின்றார்.

சீனா - இலங்கை என்பது ஒரு சிறிய விடயம் என கூறிய அவர், இந்து சமுத்திர பிரச்னையே பாரிய பிரச்னை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா இனி எவ்வளவு வேகமாக செயற்படுகின்றதோ, அந்தளவிற்கே, இந்து சமுத்திரத்தை பாதுகாத்துக்கொள்ள முடியும் என அவர் தெரிவிக்கின்றார்.

தமக்கு இந்தியா, அமெரிக்கா, சீனா உள்ளிட்ட அனைத்து நாடுகளும் தேவை என 2005ஆம் ஆண்டுக்கு முன்னர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்திருந்ததை நினைவுப்படுத்திய வீ.ஜனகன், அதே மஹிந்த ராஜபக்ஷ இன்று சீனாவே எமது உண்மையான நண்பன் என கூறுவது சீனா அவருக்கு கொடுத்த தைரியம் எனவும் குறிப்பிடுகின்றார்.

சீனாவினால் வழங்கப்பட்ட இந்த நம்பிக்கை மற்றும் துணிச்சலை, இந்தியா இதுவரை வழங்காமையே, தற்போது காணப்படுகின்ற பாரிய இடைவெளிக்கான காரணம் என அவர் கூறுகின்றார்.

சீனாவினால் இதுவரை பொருளாதார ஆதிக்கமே செலுத்தப்பட்டிருந்த நிலையில், தற்போது சீனாவின் அரசியல் கலாசாரம் உட்புகுத்தப்படுவதாக அவர் கூறுகின்றார்.

சீனாவின் ஆதிக்கத்தை இலங்கையில் குறைக்க வேண்டும் என்றால், இலங்கையில் இந்தியாவின் ஆதிக்கம் அதிகரிக்கப்பட வேண்டிய கட்டாயம் எழுந்துள்ளதாக ஜனகன் குறிப்பிடுகின்றார்.

வர்த்தக ஒத்துழைப்புக்களிலேயே சீனா உண்மையான நட்பு நாடு என்ற விதத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அன்றைய தினம் கருத்து வெளியிட்டிருந்ததாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவிக்கின்றார்.

பிரதமரின் உரை தொடர்பில் பிபிசி தமிழ் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

எனினும், இந்தியா, என்றுமே இலங்கையின் உறவு நாடு, நட்பு நாடு என்ற விதத்திலேயே செயற்பட்டு வருகின்றது எனவும் அவர் கூறுகின்றார்.

எவ்வாறாயினும், அனைத்து சந்தர்ப்பங்களிலும் வர்த்தக ரீதியில் சீனாவே இலங்கையின் நட்பு நாடு என அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல குறிப்பிடுகின்றார்.

இதேவேளை, இலங்கைக்கு இந்தியா, சீனா உள்ளிட்ட அனைத்து நாடுகளின் உறவுகளும் அத்தியாவசியமானது என அரசாங்கம் அண்மையில் தெரிவித்திருந்தது. ■

ஈழநாடு

# புலமைச் சிகரம்




## ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வினாத்தாள் II

நேரம் - 45 நிமிடம்

கல்வி tv CHANNEL

❖ **இலக்கம் 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

**30)** சூரிய நமஸ்காரத்தின் நான்காம் படிநிலை எது?
1)  2)  3) 

**31)** வடமாகாணத்தில் அமைந்துள்ள குளம்
1) அபயவாவி 2) இரணைமடுக்குளம் 3) பராக்கிரமபாகு சமுத்திரம்

**32)** உள் மூச்சு வாங்குதல் வெளி மூச்சு விடுதல் என்பது மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாட்டில் எந்த படிமுறை ஆகும்?
1) திடசித்தம் 2) உதிப்பு 3) உடலைத் தளர்த்தல்



**33)** தேசிய இலச்சினையின் பூவிதழ் வட்டத்தின் மத்தியில் இருப்பது எது?
1) சூரியன் 2) வாளேந்திய சிங்கம் 3) நெற்கதிர்

**34)** பிரித்தானியர்களால் முழுமையாக இலங்கை கைப்பற்றப்பட்ட ஆண்டு எது?
1) 1976 2) 1851 3) 1815

**35)** வருடத்தின் முதல் மாதமும் இறுதி மாதமும் பூக்கும் பூக்கள் எவை?
1) இறப்பர், வேம்பு 2) இறப்பர், தாழம்பூ 3) பிறைப்பூ, நாவல்

**36)** பானங்கள் தயாரிக்கப் பயன்படும் வேர் எது?
1) வில்வம் வேர் 2) சாத்தாவாரி வேர் 3) வெட்டி வேர்

**37)** நிலத்தில் குப்பைகளை எரிப்பதால் இறக்கும் உயிரினம் எது?
1) மண்புழு 2) பறவைகள் 3) மீன்

**38)** தச்சன் பயன்படுத்தும் உபகரணங்களில் ஒன்று
1)  2)  3) 

**39)** கைக்குட்டையில் பூ, பூக்காம்பு என்பவற்றைத் தைப்பதற்குப் பயன்படும் தையல்
1) கம்பளித் தையல் 2) சங்கிலித் தையல் 3) அடிப்படைத் தையல்


**40)** இலங்கைக்கே உரித்தான பறவையாக அமையாதது?
1) காட்டுக்கோழி 2) சபன் கோழி 3) பச்சைக்கிளி

**41)** அயடீன் குறைபாட்டால் ஏற்படும் நோய்
1) ஸ்கேவி 2) குருதிச்சோகை 3) தொண்டைக்கழலை

**42)** பின்வருவனவற்றில் பாதுகாப்பற்ற சந்தர்ப்பம் எது?
1) கூரிய உபகரணங்களைக் கையில் ஏந்தியவாறு ஓடுதல்
2) பாதையின் வலது பக்கத்தால் செல்லுதல்
3) முகக் கவசம் அணிந்து செல்லுதல்

**43)** கொப்பளிப்பான் நோயின் நோய்க்காவிகள்
1) நுளம்பு 2) அசுத்தமான உணவு 3) ஆட்கள்

**44)** எண்ணெய், கொழுப்பு அடங்கியுள்ள உணவுகளை அதிகம் உண்ணுவதால் ஏற்படும் நோய்
1) நீரிழிவு 2) சீதபேதி 3) இதய நோய்

**45)** 
கரண்டி
மெழுகுதிரி

படத்தில் காட்டியவாறு நீரைச் சூடாக்கும் போது உடனடியாக நிகழ்வது
1) நீர் ஆவியாகும் 2) நீர் சூடாகும் 3) நீர் குறையும்

**46)** நீராவி மூலம் பெறத்தக்க பயன் எது?
1) நீரைக் குளிரச் செய்தல் 2) சோறு சமைத்தல் 3) மூலிகை அவித்தல்

**47)** மாசடைந்த நீரை நுகர்வதால் ஏற்படும் நோய் எது?
1) டெங்கு 2) ஈரலழற்சி 3) சின்னமுத்து

**48)** சேதனப் பசளையாகப் பயன்படுத்துவது
1) யூரியா 2) மாட்டெரு 3) அமோனியா

**49)** எனது பாடசாலை காலியில் அமைந்துள்ளது. எனது பாடசாலை அமைந்துள்ள மாகாணம் எது?
1) வடமாகாணம் 2) கிழக்கு மாகாணம் 3) தென் மாகாணம்

**50)** காந்தம் கவர முடியாத பொருள் எது?
1) குண்டூசி 2) நெகிழி 3) இரும்பாணி

**51)** பற்சில்லுகளைக் கொண்ட உபகரணம்
1) ஒற்றைச்சில்லு வண்டி 2) மின்விசிறி 3) துவிச்சக்கரவண்டி

**52)** தொடர்பாடலுக்குப் பயன்படும் பிரசித்தி பெற்ற அச்சு ஊடகம்
1) வானொலி 2) இணையம் 3) பத்திரிகை

**53)** மின்னஞ்சல் அனுப்புவதற்குத் தேவையான சாதனம் அல்லாதது
1) கணினி 2) மடிக்கணினி 3) வானொலி

**54)** சிகிரியா அமைந்துள்ள மாவட்டம் எது?
1) கண்டி 2) அநுராதபுரம் 3) மாத்தளை

**55)** பௌத்த நூல்களை பாளி மொழியிலிருந்து ஆங்கிலத்திற்கு மொழி பெயர்த்தவர்
1) வண.எஸ்.மஹிந்த 2) கலாநிதி ஆனந்த குமாரசுவாமி 3) C.W.W.கன்னங்கரா

**56)** காற்பந்து விளையாட்டுப் போட்டியில் ஓர் அணியில் பங்குபற்றும் வீரர்களின் எண்ணிக்கை யாது?
1) 10 பேர் 2) 7 பேர் 3) 11 பேர்

**57)** கடதாசிகளை மடித்து உருவங்கள் அமைத்தலை எவ்வாறு அழைப்பர்?
1) கொலாஜ் 2) ஒரிகாமி 3) அலப்பறை

**58)** உடலுக்குச் சக்தி தரும் உணவு
1) பருப்பு 2) பாண் 3) வல்லாரை

**59)** குறைவான நீர் அருந்துவதால் ஏற்படும் அசௌகரியம் அல்லாதது
1) சிறுநீரின் நிறம் கடும் நிறமாதல்
2) தோல் உலர்தல்
3) சிறுநீரகங்கள் ஆரோக்கியமாதல்

**(30 புள்ளிகள்)**

**60)** பாடசாலை விடுமுறைக் காலத்தில் நான் சென்ற கல்விச் சுற்றுலா என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக.
(ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்பும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

1. ........................................................................................................
........................................................................................................
2. ........................................................................................................
........................................................................................................
3. ........................................................................................................
........................................................................................................

**(6 புள்ளிகள்)**

# ஆர்ப்பாட்டக்காரர்களை அடக்குவதை நிறுத்துக!

## அரசிடம் மங்கள வலியுறுத்து

**கொழும்பு, ஜூலை 11**
**ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுபவர்களின் உரிமைக்கு மதிப்பளிக்க வேண்டியது கட்டாயமாகும் என்று முன்னாள் நிதி அமைச்சர் மங்கள சமரவீர, அரசிடம் வலியுறுத்தியுள்ளார்.**



அவரது உத்தியோகபூர்வ ட்விட்டர் பக்கத்தில் பதிவிட்டிருக்கும் பதிவிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவரால் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"நான் நிதியமைச்சராகப் பதவி வகித்த காலப்பகுதியில் அநேகமாக நாளாந்தம் எனது அமைச்சுக்கு முன்னால் ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்படும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுபவர்களைக் கலைப்பதற்கு நான் பொலிஸாருக்கு அழைப்பு விடுக்கவில்லை. மாறாக போராட்டம் முடிவுக்குக் கொண்டு வரப்படும் வரையில் ஆர்ப்பாட்டக் காரர்களுடன் பேச்சில் ஈடுபட்டோம்.

சில சந்தர்ப்பங்களில் அவர்களால் முன்வைக்கப்படும் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவையாக கூட இருக்கலாம். ஆனால், கோரிக்கைகளை முன்வைப்பதற்கும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதற்குமான அவர்களின் உரிமைக்கு நாம் மதிப்பளிக்க வேண்டியது கட் டாயமாகும்.

அதேவேளை, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் மற்றும் வயது முதிர்ந்தவர்கள் கட்டாயத் தனிமைப்படுத்தலுக்கு உட்படுவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கின்றார்கள். கட்டாய சுயதனிமைப்படுத்தல் என்பது ஏற்றுக்கொள்ளப்பட முடியாததும் சட்டத்துக்கு முரணானதுமாகும்" - என்றுள்ளது. (இ)



## முடக்கத்தில் இருந்து மீண்டது கரணவாய்!

"நாட்டில்கொரோனாத்தொற்றுப் பரவலால் கேகாலை மாவட்டத்தில் ஒரு கிராமம் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் யாழ். மாவட்டம், கரவெட்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கரணவாய் உள்ளிட்ட 6 கிராம சேவகர் பிரிவுகள் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன."

- இவ்வாறு கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மத்திய நிலையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா அறிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"கேகாலை மாவட்டத்தின் மலவிட கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட கோலிந்த தோட்டத்தின் 03ஆம் பகுதி நேற்றுக் காலை 6 மணி முதல் உடன் அமுலுக்கு வரும் வகையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை, 4 மாவட்டங்களைச் சேர்ந்த சில கிராம சேவகர் பிரிவுகள் நேற்றுக் காலை 6 மணி முதல் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன.


அதனடிப்படையில் யாழ்ப்பாணம், களுத்துறை, புத்தளம் மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களிலுள்ள 6 கிராம சேவகர் பிரிவுகள் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கரவெட்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கரணவாய் கிராம சேவகர் பிரிவு தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளது" - என்றார். (இ)

## 5 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாயம்

கொழும்பு, ஜூலை 11
நாட்டின் பல பகுதிகளில் மழையுடன் கூடிய சீரற்ற காலநிலையை அடுத்து பல மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி காலி, களுத்துறை, கேகாலை, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது எனத் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது. (இ)



## பெருந்தொகை பணத்துடன் இருவர் கைது

கொழும்பு, ஜூலை 11
அத்துருகிரிய பகுதியில் ஒரு கோடி 30 இலட்சம் ரூபா பணத்துடன் சந்தேகநபர்கள் இருவரைப் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர்.

கொலன்னாவை மற்றும் வெல்லம்பிட்டிய பகுதிகளைச் சேர்ந்த சந்தேகநபர்கள் இருவரும் மோட்டார் சைக்கிள் ஒன்றில் பயணித்த வேளை, பணத்துடன் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். (இ)

# இராணுவத்தினரின் துணையுடன் இலங்கையில் சர்வாதிகார ஆட்சி!

## ஆர்ப்பாட்டத்தின் பின் விக்கி கருத்து

கொழும்பு, ஜூலை 11
"நிர்வாக ரீதியான விடயங்களில் இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டு இலங்கையில் சர்வாதிகார ஆட்சிக்கான சகல தயார்படுத்தல்களும் முழுமையடைந்துள்ளன."

- இவ்வாறு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் நேற்றுமுன்தினம் கொழும்பு சுதந்திர சதுக்கப் பகுதியில் நடைபெற்ற அரசின் அடக்குமுறைகளுக்கு எதிரான எதிர்க்கட்சிகளின் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"ஜனநாயக ரீதியில் தேர்தல் ஒன்று நடைபெறும்போது வேட்பாளர்களுக்கும் வாக்காளர்களுக்கும் இடையில் எழுத்தில் அடங்காத உடன்பாடு ஒன்று எட்டப்படுகின்றது. நாம் உங்களுக்கு வாக்களித்து நீங்கள் வென்றால் எமது பிரச்சினைகளைப் பேச வேண்டும். அவற்றுக்கு தீர்வு காண வேண்டும். அதிகாரம் கிடைத்த பின்னர் எம்மை விரட்டக் கூடாது என வாக்காளர் வேட்பாளர்களுடன் உடன்பாடு செய்கின்றனர்.

வேட்பாளர்களும் இந்த எழுத்தில் அடங்காத உடன்பாட்டை ஏற்றுக்கொண்டு, நாம் வென்றால் உங்கள் பிரச்சினைகளைத் தீர்ப்போம், சுயநலம் கருதிச் செயற்படமாட்டோம். உங்களுடன் ஒன்றாக நிற்போம் என்று கூறுகின்றனர். இதுதான் ஜனநாயகத்தின் தாற்பரியம்.

ஆனால், இவ்வாறு வாக்காளர்களுக்கு வாக்குறுதி கொடுத்து வென்ற பின்னர் மக்களை மறந்து, அவர்களுடனான உடன்பாடுகளை மீறி ஜனநாயகத்துக்கு முரணாகச் செயற்படத் தொடங்குகின்றனர். இதனால் மக்கள் இந்த அரசியல்வாதிகளுடனான தமது உடன்பாட்டை எடுத்துக்காட்ட வேண்டிய தேவை ஏற்படுகின்றது.

இதனை எடுத்துக்காட்ட முற்படும்போதே ஆர்ப்பாட்டங்களுக்குத் தடை, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவோர் கைது என ஜனநாயகத்துக்கு எதிரான சர்வாதிகாரம் தலைதூக்குகின்றது.

தற்போது நிர்வாகம் சம்பந்தமான சகல விடயங்களிலும் இராணுவத்தினர் ஈடுபடுத்தப்படுகின்றனர். இதன் மூலம் சர்வாதிகாரம் வித்திடப்படுகின்றது.

இலங்கையில் சர்வாதிகார ஆட்சிக்கான சகல தயார்படுத்தல்களும் முழுமையடைந்துள்ளன. இவ்வாறான நிலையில்தான் தம்மால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு மக்கள் ஆர்ப்பாட்டங்கள் மூலம் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்துகின்றனர். இவற்றையும் சர்வாதிகாரம் மூலம் அடக்கவே ஆட்சியாளர்கள் நடவடிக்கை எடுக்கின்றனர்" - என்றார். (இ)

## இலங்கை திரும்பியவர்களில் மேலும் 42 பேருக்குத் தொற்று

கொழும்பு, ஜூலை 11
வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்பியவர்களில் மேலும் 42 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டில் நேற்றுமுன்தினம் 1,557 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது. அவர்களில் 1,515 பேர் புத்தாண்டு கொத்தணியைச் சேர்ந்தவர்கள் என்றும், எஞ்சிய 42 பேர் வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்பியவர்கள் என்றும் அரச தகவல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதையடுத்து நாட்டில்கொரோனாத் உறுதியானவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 71 ஆயிரத்து 483 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கையும் 27 ஆயிரத்து 57 ஆக உயர்வடைந்துள்ளது.

இதனிடையே தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 41 ஆயிரத்து 35 ஆக அதிகரித்துள்ளது. (இ)



சென்னை மடல்

# தமிழகத்தின் பார்வையில் மோடியின் அமைச்சரவை விரிவாக்கம்

மே 2019இல் இரண்டாவது முறையாக நரேந்திர மோடி பிரதமராகப் பதவியேற்றபின்பு முதல்முறையாக சென்ற வாரம் ஜூலை 7ஆம் திகதி தன் கபினட்டை விரிவாக்கம் செய்திருக்கிறார். அரசியல் மற்றும் ஊடக வட்டா ரங்களில் இது பெரிய பரபரப்பையும் உற்சாகத்தையும் ஏற்படுத்தியது. தேசிய தொலைக் காட்சி சனல்களிலும் பத்திரிக்கைகளிலும் பல விவாதங்கள் எழுந்தன. கோவிட் இரண்டாவது அலை, பொருளாதார வீழ்ச்சி, வளரும் வேலைவாய்ப்பின்மை, ஏறிக்கொண்டிருக்கும் எரிபொருள் விலை போன்றவற்றால் பல விமர்சனங்கள் பெரிய அளவில் எழுந்தாலும், பாஜகவிலும் தன் தலைமையில் உள்ள அரசாங்கத்திலும் மோடி எல்லா விஷயங்களிலும் கட்டுக்குள் வைத்திருப்பதையே இந்த கபினட் விரிவாக்கம் காட்டுகிறது என்று பலரும் முடிவாகக் கூறினார்கள்.

2014 இல் மோடி முதல் முறை பதவிக்கு வந்த பிறகு நடந்திருக்கும் மிகப்பெரிய கபினட் விரிவாக்கம் இது. ஜூலை 7ஆம் திகதி வந்த பட்டியலில் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் ரவி ஷங்கர் பிரசாத், சுகாதாரத்துறை அமைச்சர் ஹர்ஷ் வர்த்தன், சுற்றுச்சூழல் துறை அமைச்சர் பிரகாஷ் ஜவ்டேக்கர் உள்ளிட்ட நான்கு முக்கிய மூத்த தலைவர்கள் பெயர் இடம் பெறவில்லை. 36 புதிய அமைச்சர்கள் பதவி ஏற்றார்கள். அவர்களுள் முன்னாள் காங்கிரஸ் தலைவர் ஜ்யோதிராதித்யா சிந்தியா, சர்பனந்தா சோனோ வால், நாராயண் ராணே, பூபேந் தர் யாதவ், அஸ்வினி வைஷ்ணவ் ஆகியோரும் உண்டு.

ஆனால், ராஷ்டிரபதி பவனின் தர்பார் ஹாலில் நடந்த பரபரப் பான இந்த நிகழ்ச்சியைப் பார்த்த பலரும் தமிழ்நாட்டுக்கும் இதற்கும் உள்ள தொடர்பையோ தொடர்பின்மையையோ கவனித் திருக்கமாட்டார்கள். தமிழ்நாட்டிலிருந்து சில முக்கிய மானவர்களை தன் புதிய குழுவில் சேர்த்துக்கொள்வார் என்று ஊடகங்கள் யூகித்து எதிர்பார்த்துவந்த நிலை யில், மாநில பாஜக தலைவர் எல். முருகனுக்கு மட்டுமே இளைய அமைச்சர் பதவி தரப்பட்டிருக்கிறது. அ.இஅ.தி.மு.கவின் முன்னாள் மக்களவை துணை சபாயநாயகர் எம். தம்பிதுரை, ஓ. பன்னீர் செல்வத்தின் மகன் ரவீந்திரநாத் குமார், பாமகவின் முன்னாள் சுகாதாரத்துறை அமைச்சர் அன்புமணி ராமதாஸ், தமிழ் மாநில காங்கிரஸின் முன்னாள் கப்பல் துறை அமைச்சர் ஜி. கே. வாசன் போன்றவர்களின் பெயரும் அடிபட்டது. ஆனால் இந்தப் பேச்சுக்கள் தமிழ்நாட்டின் ஊடக மற்றும் அரசியல் வட்டாரங்களில் மட்டுமே பெரிதாக வலம் வந்தன, நாட்டில் வேறு எங்கும், குறிப்பாகத் தலைநகர் டெல்லியில் இந்தப் பேச்சு வரவில்லை.



**“பிரதமர் மோடியின் குழுவில் 30 கபினட் அமைச்சர்கள்,தனி உரிமை பெற்ற 2 மாநில அமைச்சர்கள் தவிர, 45 மாநில அமைச்சர்கள் உட்பட, பிரதமர் தவிர 77 பேர் இடம்பெறுவார்கள். இந்த பிரம் மாண்ட அளவை விமர்சித்த காங்கிரஸ், “நேற்றுவரை குறைந்தபட்ச அரசாங்கம் அதிகபட்ச அரசாட்சி போன்ற முழக் கங்களை வைத்திருந்தவர்கள் இப்போது அதிகபட்ச அரசாங்கம் குறைந்தபட்ச அரசாட்சி என்ற வடிவத்துக்கு மாறியிருக்கிறார்கள். இது நாட்டுக்கான விரிவாக் கம் அல்ல, கட்சிகளின் முன்னேற்றத்துக்கான விரிவாக்கம்” என்று ட்வீட் செய்திருந்தது.**

**மூத்த காங்கிரஸ் தலைவர் சஷி தரூர், ”ஒரு கப்பல் பயணிக்கத் தகுதியானதா, அது போகும் பாதை சரியானதா என்றுதான் இந்தியர்கள் கவனிப்பார்கள். மேல் தளத்தில் நாற்காலிகள் அடுக்கப்பட்டிருக்கும் விதம் அவர்களுக்குப் பொருட்டல்ல” என்று ட்வீட் செய்திருந்தார்.”**

வட இந்திய ஊடகங்களில் தமிழ்நாட்டின் பிரச்னைகளும் தலைவர்களும் கண்டுகொள்ளப்படுவதில்லை என்பது ஒரு பெரிய தமிழ்த் துயரமாகவே இருந்துவந்திருக்கிறது. இதனால் டெல்லியில் உள்ள அதிகார மையங்களாலும் அவர்கள் கண்டுகொள்ளப்படாத நிலை ஏற்படுகிறது. ஜெயலலிதா ஒரு விதிவிலக்கு. தமிழ்நாட்டின் பிரச்னைகள்பற்றி அறியாமையையும் அலட்சியத்தையும் பற்றி என் வடமாநில பதிப்பாளர்களுடன் நான் பலமுறை சண்டையிட்டிருக்கிறேன்.



- பகவான் சிங் - தமிழகத்தின் சிரேஷ்ட பத்திரிகையாளர்

ஆகவே, இறுதியில் முருகன் மட்டுமே இளைய உறுப்பினராக மோடியின் குழுவில் இணைந்திருக்கிறார். ஆனால், இப்போதும் திராவிட அரசிய களத்தில் தன் இடத்தை வலுப்படுத்திக்கொள்ளும் கட்சியின் நோக்கத்தைப் பற்றி ஆழமாக யோசித்தபின்பே பாஜக தலைமை இந்த முடிவை எடுத்திருக்கிறது. 2026ஆம் ஆண்டின் சட்டமன்றத் தேர்தலின்போது, மாநிலத் தலைமை பொறுப்பு கிடைக்காவிட்டாலும் அரசாங்கத்துக்குள் நுழைய அது விரும்புகிறது.

முருகன் ஒரு தலித் என்பதால், அவர் உழைப்பாலும் தொடர் முயற்சியாலும் வறுமை, கல்வியறிவின்மை, வேலை வாய்ப்பின்மை போன்ற தளைகளிலிருந்து விடுபட்ட தலித் சமூகத்தைச் சேர்ந்த தலித் சமூகத்தினருக்கு வாய்ப்பு தருவதன்மூலம் தமிழ்நாட்டிலுள்ள 22மூ ஒட்டு வங்கி கிடைக்கும் என்று பாஜக எதிர்பார்க்கிறது. உள்கட்சிப் பிரச்னைகளாலும் எதிர்மறையான பொது பிம்பத்தாலும் தலித் அரசியல் தலைமையின் பிடி தளர்ந்துகொண்டிருக்கிறது என்று நம்புகிற காவித் தலைமை, அந்த இடத்தை முருகன் துணையுடன் பிடிக்க முயற்சிக்கக்கூடும். முருகனும் கைலாசாத்துக்கு அருகில் உள்ள டெல்லி தலைமைய கத்திலிருந்து சலுகைகளைப் பெற்று இந்த பிற்படுத்தப் பட்ட சமூகத்தினருக்குக் கொண்டுவந்து குவிக்கக்கூடும். மீன்வளத்துறையும் அவரிடம் இருப்பதால், தமிழ் நாட்டின் கடலோரப் பகுதிகளைச் சேர்ந்த பெரும் அள விலான மீனவர் சமூகத்திடமிருந்தும் முருகன் மூலமாக கட்சிக்கு ஆதரவு திரட்ட முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. டெல்லியின் உதவியுடன் ஆழ் கடல் இழுவலை விசைப்படகுகள் வாங்குவது, இலங்கை கடற்படை யிடமிருந்து பாதுகாப்பு அளிப்பது போன்ற செயல்பாடுகளின்மூலம் இது நடக்கலாம்.

மத்திய கபினட்டில் முருகன் சேர்க்கப்பட்டதால் ஏற்பட்ட வெற் றிடத்தை சென்ற வருடம் ஆகஸ்ட் மாதம் கட்சியில் சேர்ந்த முன்னாள் காவல்துறை அதிகாரி அண்ணாமலை நிரப்பியிருக்கிறார். சமீபத்திய சட்டமன்றத் தேர்தலில் அவர் தோல்வியுற்றாலும் தேர்தல் பிரச்சாரத்தின்போது அவர் பேசிய சில விஷயங்கள் சர்ச்சையைக் கிளப்பியதால் அவர் பெயர் பர பரப்பாகப் பேசப்பட்டது. மும் மொழிக் (Tamil, English and Hindi) கொள்கையால் இந்தியா முழுக்க வேலைவாய்ப்பு கிடைக்கும் என்றும், இடஒதுக்கீடுக்கு ஓர் எல்லை வேண்டும் என்றும் அவர் பேசியிருந்தார். இப்போது, ஸ்டாலினின் கபினட்டில் இருக்கும் தி.மு.க. வேட்பாளர் செந்தில் பாலாஜியின் பல்லை உடைப் பதாகக் கூறிய அவரது ஆக்ரோஷ மான பேச்சு பலரின் கவனத்தை ஈர்த்தது.

வடமேற்குத் தமிழகத்தைச் சேர்ந்த அரசியல் செல்வாக்குள்ள கவுண்டர் சமூகத்தைச் சேர்ந்தவர் அண்ணாமலை. அ.இஅ.தி.மு.கவைச் சேர்ந்த முன்னாள் முதலமைச்சர் எடப்பாடி கே. பழனிச்சாமியும் இதே சமூகத்தைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. சட்டமன்றத் தேர்தலில் தோல்வி, உள்கட்சிப் பிரிவினை, இபிஎஸ் தலைமையைக் குலைக்க முயற்சி செய்யும் சசிகலாவின் அச்சுறுத்தல் ஆகியவற்றால் துவண்டுபோயிருக்கும் அஇஅ.தி.மு.க, முன்னேற்றத்திட்டங்கள், நிதி ஒதுக்கீடு போன்றவற்றில் கவுண்டர் சமூகத்தினருக்கு உதவ முடி யாத நிலையில் இருக்கிறது. இந்த சூழலில் பொருளா தார ரீதியாக முன்னேறிய சமூகமான கவுண்டர்களை மாற்றுப் பாதையில் அழைத்துச் சென்று காவியுடன் இணைப்பார் என்று பா.ஜ.க. நம்புகிறது.

தலித் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரைச் சேர்ந்த தலைவர்களைக் கபினெட்டில் சேர்த்துக் கொள்வதன் மூலம் திராவிடத்தின் அடிப்படையான சில சமூகங்களைக் குறிவைத்து, தமிழ்நாட்டில் தனது இலக்கை அடையலாம் என்று பா.ஜ.க நம்புகிறது. 1967இல் காங்கிரஸை வீழ்த்திவிட்டு உணர்ச்சிபூர்வமான கட்சியான தி.மு.க. மேலே வந்ததிலிருந்து தமிழ கத்தில் திராவிடக் கருத்தாக் கம் கொடிகட்டிப் பறந்துகொண்டி ருக்கிறது. ஒரு தேர்தலில் அவர்களை வீழ்த்துவது கிட்டத்தட்ட முடியாத காரியம்தான்.

ஆனால், பிராமணர்கள் ஆதிக்கம் நிறைந்த, எங்கோ வட மாநிலங்களிலிருந்து வந்து குதித்த ஹிந்தியன் கட்சி இது என்று தமிழகத்தில் பாஜகவுக்கு ஒரு பிம்பம் இருக்கிறது. அதை உடைக்கவேண்டும் என்று பா.ஜ.க. தீவிர மாக முயற்சி செய்கிறது. உத்தரப் பிரதேசத்தில் செய்தது போலவே அரசியலில் பிரதிநிதித்துவம் இல்லாத சமூகங்களை அடையாளம் கண்டு, அவர்களுக்குப் பதவி தந்து கவர்ந்திழுக்க முயற்சி செய்கிறது. முருகனையும் அண்ணாமலையையும் முன்னணியில் பா.ஜ.க. நிறுத்துவதன் நோக்கம் இதுதான். மக்களில் எல்லா அங்கத்தினரையும் ஸ்டாலின் திருப்திப் படுத்துகிறாரா, எதிர்கட்சிகளின் அதிருப்தியைத் தாண்டி கட்சியை ஸ்டாலின் வளர்த்தெடுக்கிறாரா என்பதைப் பொறுத்து பா.ஜ.கவின் திட்டங்கள் வெற்றியடையும். அடுத்த சில மாதங்களின் அரசியல் களம் சுவாரஸ்ய மாக இருக்கப்போகிறது. எம்.ஜி.ஆர் ஜெயலலிதாவின் அஇ அ.தி.மு.க. பின்னடைந்துவிட்ட நிலையில், திமுகவும் பாஜகவும் மோதிக்கொள்ளப்போகின்றன. ■

**அதிகரித்த தொழில் நுட்ப வசதி கிடைப்பதன் காரணமாக உடற் செயற்பாடுகள் குறைந்து இயந்திர பாவனை அதிகரிப்பு மற்றும் கொழுப்பு, துரித உணவுகள் இனிப்பு, குளிர்பானங்கள் என்பவற்றின் பாவனை அதிகரிப்பின் மூலம் ஏற்படும் உடற் பருமன் அதிகரிப்பு புற்றுநோய்க்கான மற்றுமொரு காரணியாக அமைகின்றது.**





# வடக்கு, கிழக்கு புற்று நோயாளர்களை பராமரிப்பதில் "கேன்" அமைப்பின் பங்கு

புற்றுநோயானது உலகில் ஏற்படும் அதிகமான இறப்புகளுக்கான காரணிகளில் இரண்டாம் இடத்தை வகிக்கும் அதே நேரம் இலங்கையில் வைத்தியசாலைகளில் இடம்பெறும் இறப்புக்கான காரணிகளிலும் இரண்டாம் இடத்தை வகிக்கின்றது. உலகளாவிய ரீதியில் 2018 ஆம் ஆண்டு 9.6 மில்லியன் இறப்பு ஏற்பட்டுள்ளது.

இலங்கையில் புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை 2008 ஆம் ஆண்டு 20,246 ஆகவும் 2014 இல் 23,105 ஆகவும் அதிகரித் துள்ளது. இதே வேளை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்திலும் புற்று நோயாளர்களின் எண்ணிக்கை அதிக ரித்து வருகின்றது. வட மாகாணத்தில் 2010ம் ஆண்டு 445 ஆக இருந்த புற்று நோயாளர்களின் எண்ணிக்கை 2011ஆம் ஆண்டு 513 ஆக அதிகரித்துள்ளது. கிழக்கு மாகாணத்திலும் 2010ம் ஆண்டு 745 ஆக இருந்த புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை 757 ஆக அதிகரித்துள்ளது.

வடகிழக்கில் புற்றுநோய் உருவாக்கம் அதிகரிப்பிற்கும் அதனை தடுப்பதற்கும் தடையாக நவீனத்துவமான ஆடம்பர வாழ்க்கைமுறை, இலாப நோக்கம் சமூகத்தில் உள்ள மூடநம்பிக்கைகள் அடிப்படைக் காரணமாக அமைகின்றது. வடகிழக்கில் புற்றுநோய் பற்றிய விழிப் புணர்வு பல்வேறு விதத்தில் மக்களை சென்றடைந்தாலும் முக்கியமாக கிராமம் மற்றும் பின்தங்கிய இடங்களில் உள்ள மக்களை சென்றடையாததாலும், விழிப் புணர்வு ஏற்படுத்திய மக்களை தொடர்ச் சியாக கண்காணிப்பு செய்ய முடியாத தன் காரணமாகவும் விழிப்புணர்வின் நன்மையை ஏற்படுத்த முடியவில்லை.

சந்தையில் அதிகரிக்கப்பட்டுள்ள அசேதன உணவுகள், சுவையூட்டி கள் மற்றும் நிறமூட்டிகள் பயன் படுத்தப் பட்ட உணவுகள் இலகு வாக நுகரக்கூடிய முறையில் அனுமதிக்கப்பட்டமையினாலும் மக்களின் நேர மட்டுப்பாடால் கூடிய நேரத் தினை பொருட்கள் கொள்வனவு செய்வதில் செலவழிக்க முடியாததாலும் புற்றுநோய் தாக்கமானது அதிகரிக்கின்றது.

தற்போது வடகிழக்கு மாகாணங்களில் உள்ள இளம் சமுதாயத்தினரது மது, புகைத்தல், போதைப் பொருள் பாவனை போன்ற பழக்கம் அவர்களின் வேலையின்மை, வேலையின்மையால் உருவாகும் அதிகரித்த ஓய்வு, அதிகரித்த பணப்புழக்கம், பெற்றோரின் கவனக்குறைபாடுகள் போன்றவற்றால் அதிகரிக்கின்றது. இச் செயற்பாடு மூலமும் புற்று நோய்த் தாக்கமானது அதிகரிக்கின்றது.

அதிகரித்த தொழில்நுட்ப வசதி கிடைப்பனவின் காரணமாக உடற் செயற்பாடுகள் குறைந்து இயந்திர பாவனை அதிகரிப்பு மற்றும் கொழுப்பு, துரித உணவுகள் இனிப்பு, குளிர்பானங்கள் என்பவற்றின் பாவனை அதிகரிப்பின் மூலம் ஏற்படும் உடற்பருமன் அதிகரிப்பு புற்றுநோய்க்கான மற்றுமொரு காரணியாக அமைகின்றது.

போதிய சுகாதார மேற்பார்வையின்மையின் காரணமாக சுய பாதுகாப்பு அற்ற முறையில் ஊழியர்கள் புற்றுநோய் தாக்கத்துக்கு இலகுவாக உட்படுகின்றனர். உதாரணமாக வீதிகளில் வேலை செய்வோர், சுத்திகரிப்பு தொழிலாளர்கள்,கட்டுமான தொழிலில் ஈடுபடுவோர், ஆடைத் தொழிற்சாலை ஊழியர்கள், கிருமி நாசினி விசிறுவோர் என்போர் முகக்கவசம் மற்றும் ஏனைய பாதுகாப்பு அங்கிகள் இன்றி வேலை செய்ய அனுமதித்தல் போன்றன இதற்குக் காரணமாகின்றது.

**தெல்லிப்பளை வைத்தியசாலை**

**தெல்லிப்பளை புற்றுநோய்**

வைத்தியசாலை புற்றுநோயாளர்களுக்கான ஒரேயொரு வைத்தியசாலையாக வட மாகாணத்தில் உள்ளது. போக்குவரத்து வசதி, பணவிரயம் என்பவற்றைக் கருத்திற்கொண்டு ஏனைய மாகாணங்களில் உள்ள மக்களும் இவ் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக வருகை தருகின்றனர்.

வடகிழக்கு மாகாணங்களில் போரின் காரணமாக ஏற்பட்ட புலம்பெயர்வு, இழப்புக்கள் என்பன இங்கு வாழும் மக்களிடம் குடும்ப ஆதரவின்மை, தனிமை என்பவற்றை உருவாக்கியுள்ளது. இக் குடும்ப சூழலில் உள்ள மக்களுக்கு புற்று நோய் ஏற்பட்டால் அவர்களின் வாழ்க்கைத்தரம் முழுமையாக பராமரிப்பு இன்றி பாதிக்கப்படுவதுடன் இறுதி பராமரிப்பு கேள்விக்குறியாகின்றது. இந் நிலைமையை குறைப்பதற்காக புற்று நோய் காப்பகமான ஊயுநே காப்பகம் ஆரம்பிக்கப்பட்டது.

CANE (Cancer Aid North/ East Srilanka) நிறுவனம் 1993 ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கையில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தில் உள்ள புற்று நோயாளர்களுக்கு சேவைகளை ஆரம்பித்தோடு 2006ம் ஆண்டில் இருந்து "கேன்" தொண்டு நிறுவனமானது எல்லா மாகாணங்களையும் உள்ளடக்கிய அனைத்து மக்களுக்கான இலவச சேவைகளை வழங்கி வருகின்றது.

**கேனின் சேவைகள்**

- இலவச தங்குமிட சேவை வழங்குதல்.
- இலவச ஆரோக்கியமான உணவு வழங்கல்.
- இலவச மருத்துவ சேவைகளை வழங்குதல்.
- இலவச போக்குவரத்து சேவைகளை வழங்குதல்.
- நோயாளர்களுக்கான தரமான சேவையைப் பயிற்சி பெற்ற அனுபவம் வாய்ந்த சேவையாளர்களைக் கொண்டு வழங்குதல்.
- புற்றுநோய் சம்பந்தமான பரிசோதனை செய்வதற்கு வசதியற்று வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழ்பவர்களுக்கு வைத்திய நிபுணரின் சிபார்சின் அடிப்படையில் பரிசோதனை செலவுகளை பொறுப்பெடுத்தல்.
- கேன் நிறுவனமானது மட்டக்களப்பு புற்றுநோய் சங்கத்துக்கு ஊடாக மகரகம வைத்தியசாலையில் சிறுவர் புற்று நோய்க்கு சிகிச்சை பெறுபவர்களுக்கு நிதி வசதியை வழங்குகிறது.

**கேன் நிறுவனத்தின் வேறு சேவைகள்**

- தாதியர் மற்றும் பராமரிப்பு கற்கை நெறியை தொடர இருக்கும் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மாணவர்களுக்கான புலமைப்பரிசில் வழங்கல்.
- கேன் நிறுவனமானது வீடுகளில் தங்கியிருக்கும் புற்றுநோயாளர்களிடம் விஜயம் செய்து அவர்களுக்கு இலவச வைத்திய ஆலோசனை மற்றும் பராமரிப்பு சேவையை வழங்குதல்.
- புற்றுநோய் சம்பந்தமான விழிப்புணர்வு கருத்தரங்குகளை இலவசமாக நடாத்துதல்.

**இக் காப்பகத்தின் மூலம் எதிர்காலத்தின் திட்டமிடப்பட்டுள்ள சேவைகள்**

1. வாய், மார்பு, கற்பப்பை புற்று நோய்களுக்கான ஆரம்ப பரிசோதனையை தொடங்குதல்.
2. இறுதிப் பராமரிப்பிற்குரிய காப்பகமாக முழுமையாக மாற்றுதல்.
3. இக் காப்பகத்தின் சேவையை மேம்படுத்தி புற்றுநோயளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேலும் உயர்த்துவதற்கும் புற்றுநோயைத் தடுப்பதற்கும் மக்களின் ஆதரவு மிகவும் முக்கியமாக உள்ளது.

மேற்படி சேவைகளை மேலும் சிறப்பாக வழங்குவதற்கு ஊயுநே நிறுவனம் தனது நிதி ஆதாரத்தை வலுப்படுத்த வேண்டியுள்ளது.

உங்களின் பிறந்த நாளின் போதோ, அல்லது அன்புக்குரியவர்களின் நினைவு நாட்களின் போதோ, அல்லது திருமண நினைவு நாட்களின் போதோ, புற்று நோயாளர் காப்பகத்தில் தங்கியிருக்கும் நோயாளர்களின் ஒரு நாளுக்குரிய உணவு மருத்துவ செலவுகளை பொறுப்பெடுத்து இந் நோயார்களின் உடல் உள விருத்திக்கு உதவி செய்யலாம் அல்லவா?

விரும்பியவர்கள் தம்முடன் நேரடியாக 0212240258 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம் என கேன் அமைப்பு தெரிவித்துள்ளது.

இவ்விடயத்தில் ஆர்வமுள்ளவர்களை ஊக்குவித்து தமது மனித நேயப் பணிக்கு பங்களிக்கலாம் என CANE நிறுவனம் பொதுமக்களைக் கேட்டுக்கொண்டிருக்கின்றது.



# சுதந்திரத்துக்கான போராட்டத்தில் தமிழைக் காணோம்!

கொழும்பு, ஜூலை 11

அரசின் அடக்குமுறைகளைக் கண்டித்தும் ஜனநாயகம் மற்றும் சுதந்திரத்தை வலியுறுத்தியும் ஐக்கிய மக்கள் சக்தி தலைமையில் கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின்போது தமிழ் மொழி முற்றாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளது என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

போராட்டக்காரர்கள் தாங்கியிருந்த பதாதைகள் தனிச் சிங்கள மொழியில் மட்டுமே எழுதப்பட்டிருந்தது.

தமிழ் மொழி உரிமைக்காக உரத்துக் குரல் எழுப்பும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவருமான சி.வி.விக்னேஸ்வரன் உள்ளிட்ட தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்தப் போராட்டத்தில் பங்கேற்றிருந்தனர்.

தமிழ் மொழிக்கு இடமளிக்கப்படாததால் இரு தமிழ் எம்.பிக்கள் இடைநடுவிலேயே வெளியேறிவிட்டனர் என்றும் சமூக ஊடகங்களில் தகவல் வெளியாகியிருந்தது.(இ)

# இனித் தமிழ் மொழி புறக்கணிக்கப்படாது!

## மனோவிடம் சஜித் வாக்குறுதி



**கொழும்பு, ஜூலை 11**

**“இனித் தமிழ் மொழி தவறுதலாகவும் புறக்கணிக்கப்படாது. ஐக்கிய மக்கள் கூட்டணியில் மும்மொழிக் கொள்கை கடைப்பிடிக்கப்படும்.”**

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ, தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசனிடம் உறுதியளித்துள்ளார்.

இது தொடர்பில் மனோ கணேசன் எம்.பியின் முகநூல் பதிவு வருமாறு:-

சஜித் தொலைபேசியில் அழைத்து வருத்தம் தெரிவித்தார்.

“இனித் தமிழ் தவறுதலாகவும் புறக்கணிக்கப்படாது. ஐக்கிய மக்கள் கூட்டணியில் மும்மொழிக் கொள்கை கடைப்பிடிக்கப்படும்” என்று அவர் உறுதியளித்தார். ஆகவே, விவகாரம் இத்துடன் முடிந்தது.

இதற்கு முன்னும் இப்படி நிகழ்ந்தது. தெளிவாகச் சொன்னேன். எப்போதும் எடுத்த எடுப்பிலேயே, எடுத்தேன், கவிழ்த்தேன் என நான் அவசரப்படுவதில்லையே.

அதேபோல், என்ன நடந்தாலும், வலிக்காததை போல் சும்மா இருப்பதும் இல்லையே.

எங்கே, எப்போது, எப்படி, என்ன செய்யனும் என அனுபவம் எனக்குக் கற்றுக் கொடுத்திருக்கின்றது. எத்தனை பேரைக் கடந்து வந்த பட்டறிவு அனுபவம்! - என்றுள்ளது. (இ)

# முழங்காவில் பகுதியில் மோ. சைக்கிள் விபத்து!

## சமூக செயற்பாட்டாளர் உயிரிழப்பு

முல்லைத்தீவு, ஜூலை 11

மன்னார் வீதி, முழங்காவில் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கி படுகாயமடைந்திருந்த வடமராட்சியைச் சேர்ந்த அரச உத்தியோகத்தரும், சமூக செயற்பாட்டாளருமான இளைஞர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கணபதி அறக்கட்டளை அமைப்பின் மன்னார் மாவட்ட பொறுப்பாளரும், சமூக சேவையாளராக செயற்பட்டு வந்த அரச உத்தியோகத்தரான இளைஞரே மோட்டார் சைக்கிள் விபத்தில் உயிரிழந்துள்ளார்.

வடமராட்சி, பருத்தித்துறை - வியாபாரிமூலையைச் சேர்ந்த வைரவநாதன் யசோதரன் (வயது 28) என்பவரே உயிரிழந்துள்ளார்.

மன்னார் மாவட்டத்தில் அரச துறையில் பணிபுரிந்து வரும் குறித்த உத்தியோகத்தர் பணி முடிந்து வீடு நோக்கி பயணித்தபோது மன்னார்-முழங்காவில் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இருப்பினும் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் மாலை உயிரிழந்துள்ளார். (அ)

# வத்தளையில் வீடு புகுந்து திருட முற்பட்டவர் கிரிக்கெட் மட்டையால் அடித்துப் படுகொலை

கொழும்பு, ஜூலை 11

வத்தளைப் பகுதியில் வீடு புகுந்து திருட முற்பட்டார் எனக் கூறப்படும் ஒருவர் வீட்டு உரிமையாளர்கள் கிரிக்கெட் மட்டையால் தாக்கியதில் உயிரிழந்தார்.

32 வயதான சந்தேகநபர் நேற்றுமுன்தினம் அதிகாலை 4.30 மணியளவில் வீட்டுக்குள் புகுந்து திருட முயன்றார் எனத் தெரியவருகின்றது.

இதனை அவதானித்த வீட்டு உரிமையாளர்கள் கிரிக்கெட் மட்டையால் அவரைத் தாக்கியுள்ளனர். இதில் பலத்த காயமடைந்த சந்தேகநபர் ராகமை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.

உயிழந்த சந்தேகநபர், கடவத்தை, கிரிபத்கொடை, வத்தளை உள்ளிட்ட பகுதிகளில் 24 வீடுகளை உடைத்துத் திருடியுள்ளமை முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இலங்கை தண்டனைச் சட்டக் கோவை பிரிவு 96 இன் படி இரவில் இடம்பெறும் கொள்ளை அல்லது திருட்டு முயற்சி ஒன்றின்போது பாதிக்கப்பட்டவர்கள் தங்களைத் தற்காத்துக் கொள்வதற்காக பதில் நடவடிக்கையில் ஈடுபடும் உரிமை உள்ளது எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளையும் குறிப்பிடத்தக்கது. (இ)

# சீனியின் விலை உயரும் சாத்தியம்

உள்ளூர் சந்தையில் சீனியின் விலை மேலும் அதிகரிக்கும் அபயம் உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 10 நாட்களில் ஒரு கிலோ கிராம் சீனியின் மொத்த விலை 25 ரூபாவால் அதிகரித்துள்ளதன் பின்னணியில் இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.

தற்போது சந்தையில் ஒரு கிலோ கிராம் சீனியின் சில்லறை விலை 135 ரூபாயைத் தாண்டியுள்ளது.

இது குறித்து நுகர்வோர் விவகார அதிகார சபையின் சிரேஷ்ட செய்தித் தொடர்பாளர் ஒருவர் கருத்துத் தெரிவித்தபோது, சீனி இறக்குமதி செய்யப்படுவது தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

இலங்கையில் மாதாந்தம் சுமார் 30 ஆயிரம் முதல் 35 ஆயிரம் மெட்ரிக் டொன் வரை சீனி நுகர்வுக்காகத் தேவைப்படுகின்றது. இதில் நாட்டில் மேற்கொள்ளப்படுகின்ற சீனி உற்பத்தி மிகக் குறைந்த அளவை மாத்திரம்தான் பூர்த்தி செய்கின்றது.

அதன்படி நுகர்வுக்குத் தேவையான எஞ்சிய சீனியை இறக்குமதி செய்ய வேண்டும். எனினும், இறக்குமதி செய்யப்படுகின்ற ஒரு கிலோ கிராம் சீனிக்கு விதிக்கப்படுகின்ற வரியை 50 ரூபாவிலிருந்து 25 சதத்தால் குறைப்பது தொடர்பில் எடுக்கப்பட்ட தீர்மானம் குறித்து கடந்த காலங்களில் பல்வேறு கருத்துக்கள் நிலவின.

அப்போது இலங்கையில் சுமார் 90 ஆயிரம் மெட்ரிக் டொன் சீனி இருக்கின்றது எனத் தெரிவிக்கப்பட்டது.

பின்னர் ஒரு கிலோ கிராம் சீனிக்கு சில்லறை விலை அறிவிக்கப்பட்டது. ஆனால், அது சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இதில் சீனி ஒப்பந்தத்தின் மூலம் அரசு அதிக அளவு வரி வருவாயை இழந்தது எனத் தகவல்கள் வெளியாகியமை குறிப்பிடத்தக்கது. (இ)

**தேவை**

நல்ல நிலையிலுள்ள
Pioneer, Technics, Kenwood, Sansui (original Japan only) Amplifier, Speakers, equalizer (sound system)
தேவை.
யப்பான் தயாரிப்பு மட்டும்.
**T.P: 077 8757860**

# மரண அறிவித்தல்

**மலர்வு**
**25 - 02 - 1951**



**உதிர்வு**
**08 - 07 - 2021**

## செல்லத்துரை தணிகாசலம் (தவம்)

யாழ். வேலணை கிழக்கு செல்வநாயகம் வீதியைப் பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தை ஸ்டேஷன் வீதியை வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை தணிகாசலம் அவர்கள் கடந்த 08-07-2021 வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார், வேலணை கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கு.சி செல்லத்துரை – கனகம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வரும், கொழும்பைச் சேர்ந்த காலஞ்சென்ற ராஜசேகரம் – பூமணி தம்பதிகளின் அன்பு மருமகனும், கல்பனாதேவியின் அன்புக் கணவரும், சுகீதன், அகலியா, இந்துஜா, அனோதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சந்திராவதி, இந்திராவதி, தனேஸ்வரன், ஜெகதீஸ்வரன், தெய்வேந்திரன், ஞானேந்திரன், ரவீந்திரன், குலேந்திரன், வனஜா, உதயா ஆகியோரின் அன்புச் சகோதரரும், உதயகுமார், காலஞ்சென்ற விக்கினேஸ்வரராஜா, கீதா, தெய்வகலா, கலைவாணி, கௌசல்யா, சாந்தி, சுதாமதி, குகனேசன், மனோரஞ்சன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற விஜயசேகரம், ஜீவராணி, காலஞ்சென்றவர்களான ரவிச்சந்திரன், சித்திரானந்தன் மற்றும் உதயநாத் ஆகியோரின் அன்பு மைத்துனரும், இராசையா, உதயசந்திரிகா ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (11-07-2021) ஞாயிற்றுக்கிழமை அன்று மு.ப 08:30 மணியளவில் கல்கிசை மகிந்த மலர்சாலை 2வது மாடியில் பார்வைக்கு வைக்கப்பட்டு அதனைத் தொடர்ந்து பி.ப 2 மணியளவில் இறுதிக்கிரியை நடைபெற்று பின்னர் பி.ப 5மணியளவில் கல்கிசை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக அரச சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு அன்னாரின் இறுதிக்கிரியை நடைபெறும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
**ஞானேந்திரன் (சகோதரன்)**
**Mobile : +447443472892**

தகவல்
**குடும்பத்தினர்.**

## பருத்தித்துறையில்...

பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வு கூட முடிவுகள் வருமாறு: -

வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 08 பேர்,

யாழ்.போதனா வைத்தியசாலையில் 02 பேர்,

பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் ஒருவர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 18 பேருக்கும் , யாழ்.போதனா வில் 34 பேருக்கும், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் 03 பேருக்கும் பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப் பட்டிருந்தது.

யாழ்.பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 185 பேருக்கு பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையில் ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட வில்லை. அவர்களில் 12 பேருக்கு மீள் பரிசோதனை செய்யப்படவேண்டியுள்ள தாக வைத்தியசாலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சு.கவுடன்...

அமைப்பாளர்களை கணக்கிலெடுப் பதில்லையென்றும் சிறிலங்கா சுதந் திரக்கட்சி பலமுறை குற்றம் சாட்டியுள்ளது.

சுதந்திரக் கட்சியின் பொதுச்செய லாளர் தயாசிறி ஜயசேகரவும் அரசாங் கத்தின் நடவடிக்கை குறித்து கடுமை யாக விமர்சித்திருந்தார்.

சுதந்திரக் கட்சியின் மத்திய குழு கூட்டம், கடந்த வியாழக்கிழமை இரவு நடைபெற்றது. அப்போது, அரசாங் கத்தின் நடவடிக்கைகள் குறித்து நீண்ட விவாதம் நடந்தது.

இந்த சூழ்நிலையில் அரசாங்கத்தை விட்டு சு.க வெளியேறவேண்டும் என்று சிலர் பரிந்துரைத்திருந்தனர்.

இருப்பினும், இதுபோன்ற ஒரு முடிவை இந்த நேரத்தில் எடுக்கக்கூடாது என்று மத்திய குழுவின் சிலர் கருத்து தெரிவித் திருந்தனர்.

இந்த சூழ்நிலையில், பிரச்னைகள் குறித்து விவாதிக்க ஜனாதிபதியைச் சந்திக்க சு.க முடிவு செய்துள்ளது. 21ஆம் திகதி சந்திப்புக்கு வருமாறு ஜனாதிபதி தரப்பிலிருந்து அழைப்பு விடுக்கப்பட் டுள்ளது.

## அரசிலிருந்து...

அரசுடன் முரண்படுவதைவிடவும் கட்சி செயற்பாடுகளை கிராம மட்டத் தில் பலப்படுத்துவதற்கான நகர்வையே தற்போதைய சூழ்நிலையில் முன்னெடுக்க வேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சுட்டிக்காட்டியுள்ளார் எனவும் அறியமுடிகின்றது.

சுதந்திரக்கட்சியின் விசேட மத்திய செயற்குழுக் கூட்டம் கடந்த 8 ஆம் திகதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்றது.

“அரச கூட்டணிக்குள் சுதந்திரக்கட் சிக்கு பாகுபாடு காட்டப்படுகின்றது. கிராம மட்டத்திலும் மொட்டு கட்சி உறுப்பினர்களால் புறக்கணிப்பு தொடர் கின்றது. இனியும் அரசுடன் இணைந்து பயணிப்பதில் பயனில்லை. எனவே, வெளியேறும் அறிவிப்பை விடுக்கவேண் டும்.” - என இக்கூட்டத்தில் பங்கேற்ற பெரும்பாலான மத்திய செயற்குழு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஆனால் “ இது விடயத்தில் அவசரப் பட்டு முடிவெடுக்ககூடாது. தற்போதைய சூழ்நிலையில் அரசியிலிருந்து வெளியேறு வது ஏற்புடைய நடவடிக்கையாக அமை யாது. அவ்வாறு நடைபெற்றால் கைது கள், பழிவாங்கல்கள் இடம்பெறக் கூடும்.” - என்று மேலும் சில செயற்குழு உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இதனையடுத்து கட்சியை மக்கள் மத்திக்கு கொண்டுசெல்லும் வகையில் பலப்படுத்தல் நடவடிக்கைகள் இடம்பெற வேண்டும் எனவும், தொகுதி மட்டத்தி லான பொறிமுறை பலப்படுத்தப்பட வேண்டும் எனவும் முடிவெடுக்கப்பட் டுள்ளது.

வெளியேறுவதில் அவசரப்படாமல், கட்சியை பலப்படுத்துவதில் முன்னுரி மையளித்து செயற்படுவதே சிறப்பு என்ற திட்டத்தை மைத்திரியும் முன்வைத்துள் ளார். (அ)

## அரசுக்கு எதிராக...

மாக்சிச லெனினிச கட்சியின் ஏற்பாட் டில், யாழ்.மத்திய பஸ் நிலையத்துக்கு முன்பாக இந்த கவனவீர்ப்பு போராட் டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது போராட்டத்தில் ஈடு பட்டவர்கள், அனைத்து அரசியல் கைதி களையும் உடனடியாக விடுதலை செய்!, அனைவருக்கும் தடுப்பூசி வழங்கு, பாது காப்பு வழிகளைச் செய்து பாடசாலை களை தொடங்கு, கொரோனா திறைமறை வில் எங்களை வதைக்கதே, உணவுப் பொருட்கள், எரிபொருட்களின் விலையை உடனே குறை!, விவசாயிகள் மற்றும் மீனவர்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிக் குத் தீர்வு காண்! உள்ளிட்ட வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தி இருந்த னர்.

சம்பவம் தொடர்பாக தகவல் அறிந்து அவ்விடத்துக்கு வருகை தந்த யாழ்ப் பாண பொலிஸார், போராட்டத்தை நிறைவு செய்யுமாறு வலியுறுத்தியமையை தொடர்ந்து போராட்டம் நிறைவுக்கு கொண்டுவரப்பட்டமை குறிப்பிடத்தக் கது. (அ-03)

## நாடு திறந்த...

மாறு அரசியல் வாதிகளிடம் அவர் வலியுறுத்தி னார்.

அம்பாந்தோட்டை மாவட் டத்தில் சுற்றுலாவில் ஈடு படுவோருக்கு சினோ பார்ம் தடுப்பூசி வழங்கும் திட்டத்தை கண்காணிக்கும் நிகழ்ச்சியில் நேற்று பங் கேற்றபோது அமைச்சர் இந்த கோரிக் கையை விடுத்தார்.

சுகாதாரத் துறையால் வழங்கப்பட்ட தனிமைப்படுத்தப்பட்ட அறிவுறுத்தல் களை மீறுபவர்களுக்கு சட்டத்தைப் பயன் படுத்துவது குறித்து பேச உரிமை இல்லை என்று அமைச்சர் நாமல் குறிப்பிட்டார்.

இதற்கிடையில், இலங்கைக்கும் இந்தி யாவுக்கும் இடையிலான கிரிக்கெட் போட்டியின்போது பார்வையாளர்களுக் காக மைதானங்களைத் திறக்கும் சாத்தி யம் சுகாதாரத் துறையுடன் விவாதிக்கப் பட்டு வருகிறது என்று அவர் கூறினார்.

மக்கள் தொகையில் பெரும் சதவீதத் திற்கு கோவிட்-19 தடுப்பூசி கொடுத்த பிறகு, அனைத்து விளையாட்டுகளுக்கும் பார்வையாளர்களைத் திறக்க முடியும் என்றும் அமைச்சர் கூறினார்.

## நேற்று 1,548...

ஆக உயர்ந்துள்ளது.

நேற்று கண்டறியப்பட்டவர்களில் 1,515 பேர் புத்தாண்டு கோவிட் கொத் தணியுடன் இணைக்கப்பட்டுள்ளனர். சமீபத்தில் வெளிநாட்டிலிருந்து நாட் டுக்கு வந்த 33 நபர்களும் நேற்று தொற் றுடன் அடையாளம் காணப்பட்டனர்.

தற்போது நாடு முழுவதும் 26,758 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நேற்று தொற்றில் இருந்து மீண்ட 1,804 நபர்கள் வைத்தியசாலைகளில் இருந்து வெளியேறினர், குணமடைந்த வர்களின் எண்ணிக்கை 242,839 ஆக உயர்ந்தது.

## காணாமல்...

ரிழந்துள்ளார்.

அவரது மகன் இராசரத்தினம் கேதீஸ் வரன் 1995 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத் தில் இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிக் குள் வைத்து காணாமல் ஆக்கப்பட்டதாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அமைப்பின் முக்கியஸ்தர் பத்மநாதன் கருணாவதி தெரிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்கில் பிள்ளைகளைத் தேடி அலைந்த நிலையில் உயிரிழந்த தாய் தந்தையர்களின் எண்ணிக்கை தற்போது 214 ஆக அதிகரித்துள்ளதாக வும் கருணாவதி தெரிவித்துள்ளார்.



முல்லைத்தீவு விமானப்படை முகாமில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்ட குழுவினர் நேற்று அங்கு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# சுற்றித்திரியும் தொற்றாளர்கள்

கொழும்பு, ஜூலை 11

பாணந்துறை சுகாதார அலுவலர் பிரி வில் கொரோனா தொற்று நோயாளர்கள் அதிகளவில் காணப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

கொரோனாவால் பாதிக்கப்பட்டவர் களின் வீடுகளுக்கு எவ்வித அடையாளங் களும் இல்லாத காரணத்தினால், இப்பகுதி யில் உள்ள மக்களின் பாதுகாப்பிற்கு பெரும் அச்சுறுத்தலாக இருப்பதாக குற்றம் சுமத்தப்படுகின்றது.

பொது சுகாதார பரிசோதகர்கள் மற் றும் பிற சுகாதார ஊழியர்களின் வேலை நிறுத்தம் முடிவடைந்து பல நாட்கள் ஆகிவிட்டாலும், அப்பகுதியில் கொரோ னாவால் பாதிக்கப்பட்டவர்களின் வீடுகளுக்குச் சென்று பொது சுகாதார பரிசோதகர்கள் பார்வையிடவில்லை என்றும் அப்பகுதியில் வசிப்போர் கூறுகின்றனர்.

இதேவேளை, கொரோனாவால் பாதிக்கப்பட்ட நபர்கள் அப்பகுதிகளில் சுற்றித்திரிவதாகவும் தெரிவிக்கப்படுகின் றது.

## செப்ரெம்பருக்கு முன் நாட்டில் பெருமளவானோருக்கு தடுப்பூசி

கொழும்பு, ஜூலை 11

தற்போது கணிசமான சதவீதமானவர்களுக்குத் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளதால், பொரு ளாதார நடவடிக்கைகளுக்காக அதிக சந்தர்ப்பத்தை வழங்கத் தேவையான நடவடிக்கை களை எடுக்குமாறு பணித்துள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, சனத்தொகை யில் பெருமளவானோருக்கு செப்டெம்பர் மாதத்துக்கு முன்னர் தடுப்பூசி பெற்றுக் கொடுக்க நடவடிக்கைகளை எடுக்குமாறும் கேட்டுக்கொண்டார்.

தடுப்பூசி ஏற்றுதல் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் குறித்த கோவிட்-19 ஒழிப்பு விசேட குழுவுடன், ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின் போதே, ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார். கொரோனா வைரஸ் பரவும் ஆபத்து அடையாளம் காணப்பட்டுள்ள மாவட்டங் களுக்கு முன்னுரிமை அளித்து, ஜூலை மாதத்துக்குள் கிடைக்கும் தடுப்பூசிகளை அம்மக்களுக்கு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

அந்த வகையில், ஜூலை 11ஆம் திகதி கிடைக்கவிருக்கும் 2 மில்லியன் சினோபார்ம் தடுப்பூசிகளை, கொழும்பு மாவட்டத்துக்கு 2 இலட்சம், கம்பஹாவுக்கு 5 இலட்சம், களுத்துறைக்கு 5 இலட்சம் என்ற அடிப்படையில் ஒதுக்கப்பட்டுள்ளன.

இம்மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர், மேல் மாகாணத்தில் உள்ள 30 வயதுக்கு மேற் பட்ட அனைவருக்கும் தடுப்பூசி வழங்கி முடிக்கப்பட வேண்டும் என்று, ஜனாதிபதி தெரிவித்தார்.

# வாடகை வாகனத்தின் சாரதி பரிதாப மரணம்

வெள்ளவத்தை, ஜூலை 11

புளொக்கற்கள் விழுந்ததால் வாடகை வாகனத்தின் சாரதி ஒருவர் பரிதாபகர மாக உயிரிழந்த சம்பவம் வெள்ளவத் தைப் பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

வெள்ளவத்தை, சுவிசுதராம பிர தேசத்தில் நிர்மாணிக்கப்பட்டு வரும் கட்டடமொன்றிலிருந்து ஒரு தொகை புளொக்கற்கள் கார் ஒன்றின் மீது விழுந்த தில் காருக்குள் இருந்த நபர் உயிரிழந்துள் ளார் என்று வெள்ளவத்தை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காரின் சாரதி காரைத் திருப்புவதற்கு முயற்சித்தபோதே இந்த அனர்த்தத்தை எதிர்கொண்டார்.

கடும் காற்றுக் காரணமாக குறித்த கட்டடத்தின் மதில் சுவர் சரிந்ததில் அதி லிருந்த புளொக்கற்கள் காரின் மீது விழுந்துள்ளன.

இந்தச் சம்பவத்தில் கடுவெல கொரத்தொட்ட பிரதேசத்தைச் சேர்ந்த 52 வயதுடைய நபர் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை வெள்ளவத் தைப் பொலிஸார் மேற்கொண்டு வரு கின்றனர். (இ)

## ஆசிய அபிவிருத்தி...

கும் வகையிலும் இந்த கடனுதவியை வழங்க தீர்மானித்துள்ளதாக வங்கியின் தலைவர் மசாட்சுகு அசகவா தெரிவித் துள்ளார்.

குறித்த கடன் ஒப்பந்தத்தில் திறை சேரியின் செயலாளர் எஸ். ஆர். ஆட்டிக் கல மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் ஆகியோர் கையெழுத்திட்டனர்.

## மாகாணத்தடை...

பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

திருமண நிகழ்வையும் நடத்தலாம். மண்டபத்தின் அளவில் அடிப்படையில் 25 சதவீதமானோரே பங்கேற்கலாம். ஆகக் கூடுதலாக 150 பேர் மட்டுமே பங்கேற் கலாம்.

## தாதியர்கள், பல்...

திகதி முதல் தாதிய உத்தியோகத்தர் களுக்கும், ஏப்ரல் 5 முதல் பல் அறுவைச் சிகிச்சை வல்லுநர்களுக்கும் பயனுள்ள தாக இருக்கும்.

மருத்துவ அதிகாரிகளுக்கான ஓய்வூ திய வயதும் ஏப்ரல் 05 முதல் 63 ஆக உயர்த்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஈழநாடு
Eelanadu

# ஜோசப் ஸ்டாலின் கைது ஜனநாயகப் படுகொலை

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கடும் கண்டனம்



யாழ்ப்பாணம், ஜூலை 11

**இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கைது ஒரு ஜனநாயகப் படுகொலையாகும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வன்மையாகக் கண்டித்துள்ளது.**

**அக்கட்சியின் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி க.சுகாஸ் யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"இலங்கை இராணுவ ஆட்சியை நோக்கி நகர்ந்து கொண்டிக்கின்றது. இங்கு ஜனநாயகப் படுகொலை தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

சேர் ஜோன் கொத்தலாவல தேசிய பாதுகாப்பு கல்லூரி சட்ட மூலத்துக்கு எதிராக ஜனநாயக வழியில் அஹிம்சை முறையிலே எதிர்ப்புத் தெரிவிக்க முற்பட்ட இலங்கை ஆசிரியர் சங்கத்தினுடைய பொதுச்செயலாளர் - மனித உரிமைச் செயற்பாட்டாளர் ஜோசப் ஸ்டாலின் கைதுசெய்யப்பட்டு முறையற்ற விதத்தில் தனிமைப்படுத்தப்பட்டு இருக்கின்றார். இந்தக் கைதையும் தனிமைப்படுத்தல் செயற்பாட்டையும் நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இலங்கை பாராளுமன்றத்தில் இருக்கின்ற சேர் ஜோன் கொத்தலாவல தேசிய பாதுகாப்பு கல்லூரி சட்டமூலம் என்பது இலங்கையை சட்டரீதியாக இராணுவ மயப்படுத்தலுக்கு உட்படுத்துவதற்கு வழி வகுக்கின்ற ஒரு சட்டமூலம்.

இந்தச் சட்டமூலத்தை ஜனநாயக வழியிலே எதிர்த்த இலங்கை ஆசிரியர் சங்கத்தினுடைய பொதுச் செயலாளர் உள்ளிட்டவர்களை சுகாதார விதிகளை மீறினர் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்த பொலிஸார், அவர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தினர். நீதிமன்றம் அவர்களுக்குப் பிணை வழங்கியது. எனினும், அவர்கள் வலுக்கட்டாயமாகக் கேப்பாப்பிலவு இராணுவ முகாமில் தனிமைப்படுத்தல் என்ற பெயரில் அடைத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

உண்மையில் இது ஒரு கடத்தல் பாணியிலேதான் தனிமைப்படுத்தல் அமைந்திருக்கின்றது என்பது கசப்பான உண்மை.

குறித்த சட்டமூலமானது ஒரு பல்கலைக்கழகத்தை இராணுவ மயப்படுத்தி அந்தப் பல்கலைக்கழகத்தில் வெளியேறுகின்றவர்களை இராணுவ மயமாக்கலுக்கு உட்படுத்தி அதற்குப் பழக்கப்படுத்தி வெளியேற்றுகின்ற செயற்பாட்டுக்கு அனுமதிக்கின்றது.

இந்தக் கல்லூரி இலங்கையினுடைய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டது என்பது அவதானிக்கப்பட வேண்டிய விடயம். ஆகவே, இது ஒரு தனியான சட்டத்தின் கீழ் ஆளப்படுகின்ற ஒரு கல்லூரியாக இருக்கின்றது.

இதனுடைய தாற்பரியத்தை உணர்ந்தே ஜோசப் ஸ்டாலினும் சகோதர மொழி பேசுகின்ற நபர்களும் இணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தி இருந்தார்கள். அதற்காக அவர்கள் கைதுசெய்யப்பட்ட முறையே ஜனநாயகத்துக்கு முரணானதாக இருந்தது .

கோட்டாபய அரசினுடைய எதேச்சதிகார சர்வாதிகார ஆட்சி எல்லை மீறிக்கொண்டிருக்கின்றது" - என்றார். (இ - 03)

# பேக்கரிப் பொருட்களின் விலை அதிகரிக்கப்படாது

## நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை அறிவிப்பு



கொழும்பு, ஜூலை 11

கோதுமை மா விலையை அதிகரிக்க வேண்டாம் என்று சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் செய்து கொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தம் காரணமாக பாண் உள்ளிட்ட பேக்கரிப் பொருட்களின் விலையில் அதிகரிப்பு ஏற்படாது என்று நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

கோதுமை மா இறக்குமதி செய்யும் பிரதான நிறுவனம் ஒன்று ஒரு கிலோ மாவின் விலையை 18 ரூபாவினால் அதிகரித்துள்ளதால் பேக்கரிப் பொருட்களின் விலையை அதிகரிக்க வேண்டியிருக்கும் என்று பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்து வருகின்றது.

இந்நிலையில், அனுமதியின்றி கோதுமை மா விலையை அதிகரித்த குறித்த நிறுவனத்துக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

இருப்பினும், நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ணவுக்கும் குறித்த நிறுவனத்தின் பிரதிநிதிகளுக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர், நிறுவனத்தின் பிரதிநிதிகள் கோதுமை மாவின் விலை அதிகரிக்கப்படாது என உறுதியளித்துள்ளனர்.

இதையடுத்து நாட்டில் பேக்கரிப் பொருட்களின் விலையில் அதிகரிப்பு ஏற்படாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# 15 வயது சிறுமி துஷ்பிரயோக வழக்கில் வைத்தியர் உட்பட நால்வருக்குப் பிணை

கொழும்பு, ஜூலை 11

கொழும்பு - கல்கிஸைப் பகுதியில் 15 வயது சிறுமி ஒருவரை இணையத்தளம் ஊடாக பாலியல் தொழிலுக்காக விற்பனை செய்தமை மற்றும் பலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியமை தொடர்பில் கைதுசெய்யப்பட்ட 35 பேரில் நால்வர் நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்புடைய சந்தேகநபர்களான கடற்படையின் விசேட வைத்திய நிபுணர், மிஹிந்தலை பிரதேச சபை உப தவிசாளர் மற்றும் இரத்தினக்கல் வர்த்தக தொழில் அதிபர்கள் இருவர் ஆகியோரே இவ்வாறு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களைத் தலா 25 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளிலும் மற்றும் தலா 25 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் விடுவிக்க கொழும்பு மேலதிக நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பிப்பித்துள்ளது.

இவர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட அடையாள அணிவகுப்பு முடிந்ததைத் தொடர்ந்து இவர்களைப் பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

இதற்கிடையில், அடையாள அணிவகுப்பின்போது குறித்த சிறுமி நான்கு சந்தேகநபர்களையும் அடையாளம் கண்டுள்ளார் என்று நீதிமன்றத்துக்குத் தகவல் வழங்கப்பட்டது.

அத்தோடு, துஷ்பிரயோத்துக்கு முன்னர் சந்தேகநபர்கள் யாரும் தனது வயதைக் கேட்கவில்லை என்று அடையாள அணிவகுப்பின்போது சிறுமி வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

இந்த வழக்கு குறித்த மேலதிக விசாரணை எதிர்வரும் 19ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

குறித்த வழக்கில் மாலைதீவு முன்னாள் இராஜாங்க அமைச்சர், மிஹிந்தலை பிரதேச சபை உப தவிசாளர், பிரபல வர்த்தகர் ஒருவர், மதகுரு ஒருவர், கப்பல் கப்டன் மற்றும் கப்டனின் உதவியாளர் ஒருவர் மற்றும் கடற்படையின் விசேட வைத்திய நிபுணர் உள்ளிட்ட 30 இற்கும் மேற்பட்டோர் அண்மையில் கைதுசெய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# தமிழறிஞர் சத்தியசீலன் காலமானார்



திருச்சி ஜூலை 11

மூத்த தமிழறிஞரும் தமிழகத்தின் தலைசிறந்த இலக்கியவாதிகளில் ஒருவருமாகிய கலைமாமணி, சொல்லின் செல்வர் நாவுக்கரசர் அய்யா சோ.சத்தியசீலன் நேற்றுமுன்தினம் இரவு காலமானார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நேற்று சனிக்கிழமை மாலை திருச்சியில் நடைபெற்றது.

பேராசிரியர் சத்தியசீலனுக்கு அகில இலங்கை கம்பன் கழகம் 2007ஆம் ஆண்டில் கம்பன் புகழ் விருது வழங்கிக் கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

# மன்னார் கரையோரப் பகுதி மக்களுக்கு 'பைசர்' தடுப்பூசி

மன்னார், ஜூலை 11

மன்னார் மாவட்டத்தில், 'பைசர்' தடுப்பூசி செலுத்தும் பணி நேற்று இரண்டாவது நாளாக முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் மாவட்டத்திலுள்ள கரையோர பிரதேசங்களில், அபாயம் கூடிய கிராமங்கள் அடையாளம் காணப்பட்டு, அதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டு, குறித்த கிராமங்களை சேர்ந்த, 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு, கொரோனாத் தடுப்பூசி வழங்கப்பட்டு வருகின்றது.

அந்தவகையில், நேற்று, நானாட்டான் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்த, வங்காலை, அச்சங்குளம், நறுவலிக்குளம், வஞ்சியங் குளம் ஆகிய கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த, 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு, நானாட்டான் சுகாதார வைத்திய அதிகாரி ரூபன் லெம்பேட் தலைமையில், வங்காலை புனித ஆன்ஸ் ஆலய வளாகத்தில் வைத்து, தடுப்பூசிகள் வழங்கப்பட்டன.

இதேவேளை, முசலி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில், வைத்திய அதிகாரி ஒஸ்மன் டெனி தலைமையில், அரிப்பு, சிலாவத்துறை, முத்தரிப்புதுறை பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கும் தடுப்பூசிகள் வழங்கப்பட்டன.

மன்னார் மாவட்டத்துக்கு, சுமார் 20 ஆயிரம் 'பைசர்' தடுப்பூசிகள் வழங்கப்பட்ட நிலையில், 2 ஆம் கட்டமாக, மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ரி.வினோதன் தலைமையில் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை இடம்பெறுகின்றது.

பொதுச் சுகாதார வைத்திய அதிகாரிகள், தொற்று நோய் விஞ்ஞான பிரிவுக்கான வைத்திய அதிகாரி உட்பட சுகாதாரத்துறையினர் கடமைகளில் ஈடுபட்டுள்ள நிலையில், அதிகளவான மக்கள், ஆர்வத்துடன் தடுப்பூசிகளைப் பெற்று வருகின்றனர். (இ)




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 11.07.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : அறிந்தும் அறியாமலும்
11.00 மணி : BEAT BOX
11.30 மணி : தடை அதை உடை-தற்காப்புக்கலை
**பகல்**
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி



1.30 மணி : வீக் என்ட் மூவி-ஆசை
4.30 மணி : காட்டூன் தமிழ்
5.00 மணி : COFFE WITH பிரமுகர்
6.00 மணி : கலக்கல் ஸ்ரார்-
திறமையாளர்களுக்கான களம்



**இரவு**
7.00 மணி : SPOTLIGHT
8.00 மணி : இரவுச் செய்திகள்
09.00 மணி : செல்லாடுகளம் -கொரோனாவின் பின்
நம் இளையவர்களும் வழமைக்கு
திரும்புவார்கள்?



10.00 மணி: -நேர்கொண்ட பார்வை-திருகேஸ்
செல்லசாமி-இ.தொ.க-கொழும்பு
மாவட்ட அமைப்பாளர்



## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு
**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா
**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)
**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே
**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்
**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்
**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்
**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்
**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை
(மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபமாலை
**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்சிந்தனை
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை
(மறு ஒலிபரப்பு)

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்
**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு